Annual Subscription Rs. 90/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 23 ஜூன் 2010 இதழ் - 6




## கிறிஸ்துவின் சபை

காங்கயம் – 638 701. தமிழ்நாடு. இந்தியா.

04257 - 230030, 230603, 98427 - 30382, 99655 - 30385

E-Mail : Kangayamcofc@eth.net.

# திருமறை ஆசான்

இதழ் ஆசிரியரின்

## திருமறை தியானம்

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்





## ஆசானின் அறிவுரையில்...

1. ஆசிரியர் உரை ........ 1
2. நாம் ஏன் தேவனை விசுவாசிக்கிறோம்? ........ 10
3. பெண்கள் பகுதி ........ 15
4. வாலிபர் பகுதி ........ 17
5. சிறுவர் பகுதி ........ 20
6. கிறிஸ்துவின் மணவாட்டி ........ 22
7. கொடுத்தல் ஒரு வேதாகம பாடம் ........ 25
8. துன்பப்படும் கர்த்தருடைய தாசன் ........ 29
9. ஆராதனையில் இசைக்கருவி கூடாது
என்பதற்கான 30 காரணங்கள் ........ 31

# THIRUMARAI AASAAN

**S. Rajanayagam**
**Editor**

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol. 23 JUNE - 2010 Issue - 6**


ஆசிரியர் உரை

## "காணாமல் போன காசு"

இப்பூமியின் வாழ்க்கையில் ஒரு மனிதனுக்கு துக்கத்தை வரவழைக்கக் கூடிய காரியங்களில் குறிப்பிடத்தக்கது தன்னிடம் இருப்பதைத் தொலைப்பதால் அல்லது தன்னிடமிருப்பது காணாமல் போவதால் வருவது. ஒவ்வொருவருக்கும் தங்கள் இளமைப் பருவம் தொடங்கி, வாழ்க்கையின் ஏதாவது ஒரு கட்டத்தில் அல்லது சந்தர்ப்பத்தில் எதையாவது தொலைத்த அனுபவம் இருக்கிறபடியால், இந்தத் துக்கத்தின் தன்மை பற்றி நான் பெரிதாக விளக்க வேண்டிய அவசியமில்லை. இந்தத் துக்க மானது, தொலைக்கப்பட்டதின் மதிப்பைப் பொறுத்து வேறுபடு வதாகவும் இருக்கும். இன்னும், ஏதாவது ஒரு பொருளைத் தொலைப்பதைக் காட்டிலும், ரொக்கப் பணத்தைத் தொலைப்பது, உடனடியான பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதாக இருப்பதால், துக்கத்தின் அளவு சற்று கூடுதலாகவே இருக்கும். அப்படித்தானே!

சரி, இப்படித் தன் சரீர வாழ்வில் ஒன்றைத் தொலைப்ப தால் ஏற்படும் பாதிப்பை முற்றுமுடிய அறிந்திருக்கும் மானிடம், அதுவும் சில வேளைகளில், தான் தொலைத்த அல்லது இழந்த ஒன்றிற்காக, நாள் கணக்கிலும், வாரக்கணக்கிலும், மாதக் கணக் கிலும், ஏன் வருடக் கணக்கிலும் கூட துக்கப்பட்டு பாதிப்புக்குள் ளாகும் மானிடம், தன் ஆன்மீக வாழ்வில், நித்திய காலத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் ஒன்றைத் தொலைத்து விட்டது குறித்து எவ்வித உணர்வுமில்லாமல் மரத்துப்போன நிலையில் இருப்ப தைக் கண்ணுற்ற இயேசு ஆண்டவர், இப்பூமியிலிருந்த

நாட்களில், இந்நிலையை மாற்றும்படியாக ஏராளமான காரியங்களைப் போதித்தார். ஆம், ஆன்மீக வாழ்க்கையில் மனிதர்கள் தொலைந்து அல்லது இழந்து போனவர்களாக இருக்கிறார்கள் என்பதையும், அவர்களை மீட்டெடுக்கும்படியாகவே இப்பூமிக்குத் தான் வந்தேன் என்பதையும் (லூக் 19:10) அவர்கள் ஏற்றுக் கொள்ளும்படியான அளவில், அவர்கள் கேட்டறியும் திராணிக்குத்தக்கதாக உபதேசித்து உதவி செய்தார் (மாற் 4:33).

தொலைந்து போன நிலையிலிருந்த அவர்கள், மீட்கப்பட வேண்டுமென்ற நோக்கோடு அவர்களுக்கு உபதேசிக்க அவர் பயன்படுத்திய முறைகளில் ஒன்று தான் உவமைகள். “பரத்துக்கடுத்த காரியங்களின் உண்மைப் பொருளை, கேட்பவர்கள் உணர்ந்து ஏற்றுக்கொள்ளும்படியாக இயேசுவால் பயன்படுத்தப்பட்ட எளிய உதாரணங்கள் தான் உவமைகள்”. ஏராளமான உவமைகளை இயேசு ஆண்டவரால் பயன்படுத்தப்பட்டிருந்தாலும், ஆவியானவரால் நமக்கு சுமார் 40 உவமைகள் மாத்திரம் வெளிப்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

அப்படிப்பட்ட உவமைகளில் மூன்று, எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்து எழுதும் ஞானம் கொண்ட (லூக். 1:3) வைத்தியனாகிய லூக்காவால், 15-ம் அதிகாரத்தில், ஆவியானவரின் துணை கொண்டு எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆம் அவை “காணாமல் போன ஆடு” (15:4-6), “காணாமல் போன காசு” (15:8,9) மற்றும் “ஊதாரி மைந்தன்” (15:11-24). இம்மூன்றும் ஏறத்தாழ ஒரே பொருளை வலியுறுத்தும் வித்தியாசப்பட்ட உவமைகள். முதலாவது, பெலஸ்தீனா தேசத்தின் நாட்டுப்புறங்களில் நடக்கும் ஒன்றாகவும், இரண்டாவது வீட்டில் நடக்கும் ஒன்றாகவும், மூன்றாவது, குடும்பத்தில் நடந்த ஒன்றாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளது. மேலும், முதலாவது, நூறில் ஒன்று காணாமல் போவது பற்றியும், இரண்டாவது, பத்தில் ஒன்று காணாமல் போவது பற்றியும் மூன்றாவது இரண்டில் ஒன்று இழந்து போனது பற்றியும் பேசுகிறது. இவைகளில் இரண்டாவதில் தான், இம்மாதத்திற்காக நமது சிந்தையைச் செலுத்த உள்ளோம்.

அதற்கு முன்பாக, திருமறை ஆசானின் வழக்கத்தின்படியாக, இயேசு எந்தப் பின்னணியில் இந்த உவமைகளைச் சொன்னார் என்பதைத் தெரிந்துவிட்டு, மேலும் தொடர்வது நமக்குப் பிரயோஜனமாக இருக்கும் என நம்புகிறேன்.

அந்நாட்களில் ஆயக்காரர் அதிகமாக வசித்த பட்டணமாகிய எரிகோவிற்கு அருகேயுள்ள யோர்தான் ஆற்றுப் படுகையண்டை நடந்த ஒரு சம்பவமாக இது தெரிகிறது. ஏனெனில், “சகல ஆயக்காரரும், பாவிகளும் அவருடைய வசனங்களைக்

கேட்கும்படி அவரிடத்தில் வந்து சேர்ந்தார்கள்" (லூக். 15:1) என்று லூக்கா கூறுகிறார். இயேசுவின் நாட்களில், இரண்டு வகையான ஆயக்காரர்கள் இருந்துள்ளதாகத் தெரிகிறது. முதல் வகை, ரோம அரசாங்கத்தின் நேரடிப் பார்வையில், அப்பதவி பெற்று சமுதாயத்தால் மதிக்கப்பட்டவர்கள். அடுத்த வகை, நேரடியாகப் பதவி பெறாமல், இரண்டாந்தர நிலையிலிருந்து, தனக்கு மேலிருப்பவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்த வேண்டிய அவசியத்திலிருந்தவர்கள். இவர்கள், தங்கள் விருப்பம் போல் வரிவசூலைச் செய்து ஜனங்களைப் பிழிந்தபடியால், யூதர்களின் ஒட்டுமொத்த வெறுப்புக்கு ஆளான வர்களாக இருந்தனர். மோசேயின் பிரமாணத்தின் போதனைகளைப் பகிரங்கமாக மீறும் பாவிகளோடு பாவிகளாகவே இந்த ஆயக்காரர்கள் சக யூதர்களால் பார்க்கப்பட்டனர்.

ஒருவேளை, சக யூதர்களின் பார்வைக்கு இவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும், தங்களை நீதிமான்களென்று (லூக். 10:29). காட்டிக் கொள்வதற்கு அந்நாட்களில் பெரும்பாடுகள் பட்ட பரிசேயர், வேதபாரகர்களைக் காட்டிலும் ஒரு வகையில் நல்லவர்களாகவே இருந்துள்ளனர். எப்படியெனில், பரிசேயர், சதுசேயர், வேதபாரகர் போன்றவர்கள் இயேசுவிடம் எப்படியாவது குற்றம் கண்டுபிடிக்க அலைந்து திரிந்தவேளையில் (யோவான் 8:6), இந்த ஆயக்காரரும், பாவிகளும், "இயேசுவின் வசனத்தைக் கேட்கும்படி" (வச 1) அவரிடத்தில் வந்துள்ளார்கள் என்பது கொஞ்சம் ஆச்சரியமாகத்தான் உள்ளது. "மனுஷர் உள்ளத்திலிருப்பதை அறிந்து கொள்ளும்" (யோவான் 2:25) இயேசுவானவர், அங்கே அவர்களை "ஏற்றுக் கொண்டு" போதிக்கிறார். ஆனால், இந்த வெள்ளையடிக்கப் பட்ட கல்லறைகளோ (மத். 23:27) இயேசுவின் செயலை விமர்சித்து முறுமுறுத்தார்கள். இப்படி இழந்துபோன ஆத்துமாக்களின் மதிப்பை உணராமல், தங்களை ஆன்மீகத் தலைவர்கள் என்றும், மார்க்க வழிகாட்டிகள் என்றும் தம்பட்டம் அடித்துக் கொண்டு திரிந்தவர்களுக்கு உறைக்கும்படியாகவே, இயேசு ஆண்டவர் இம்மூன்று உவமைகளையும் அடுத்தடுத்து அவர்கள் கண்களுக்கும், மனதுக்கும் முன்பாகக் கொண்டு வந்து நிறுத்தினார்.

அவைகளில், இரண்டாவது உவமைதான், "காணாமல் போன காசு". "அன்றியும், ஒரு ஸ்திரீ பத்து வெள்ளிக்காசை உடையவளாயிருந்து, அதில் ஒரு வெள்ளிக்காசு காணாமல் போனால், விளக்கைக் கொளுத்தி, வீட்டைப் பெருக்கி, அதைக் கண்டுபிடிக்கும் வரைக்கும் ஜாக்கிரதையாய்த் தேடாமலிருப்பாளோ? கண்டுபிடித்த பின்பு, தன் சிநேகிதிகளையும் அயல் வீட்டுக்காரிகளையும் கூட வரவழைத்து; காணாமல் போன

வெள்ளிக்காசைக் கண்டுபிடித்தேன், என்னோடே கூடச் சந்தோஷப்படுங்கள் என்பாள் அல்லவா? அதுபோல மனந்திரும்புகிற ஒரு பாவியினிமித்தம் தேவனுடைய தூதருக்கு முன்பாகச் சந்தோஷமுண்டாயிருக்கிறது என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் " (லூக் 15:8-10).

இந்த உவமையில், தான் தொலைத்த மதிப்புமிக்க காசைக் கண்டுபிடிக்க அந்த ஸ்திரீ எப்படிப்பட்ட வழிமுறைகளை பயன்படுத்தினாள் என்று இயேசு ஆண்டவர் கூறுவதைக் கவனித்தால், மானிடம் தனது ஆன்மீக வாழ்க்கையில் தொலைத்திருக்கிற விலைமதிப்பில்லாத (மத். 16:26) ஆத்துமாவைக் கண்டுபிடிப்பதற்கு அதே வழி முறைகளைப் பயன்படுத்தி, ஆத்தும இரட்சிப்படைய முடியுமென்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.

## I விளக்கைக் கொளுத்தினாள்

"காணாமல் போன காசு" உவமை நமக்குக் கற்றுக் கொடுக்கும் முதல் பாடம், தொலைந்துபோன ஒன்றைக் கண்டுபிடிப்பதற்கு, முதலாவது தேவைப்படுவது "ஒளி" அல்லது "வெளிச்சம்" என்பது.

ஆம், இயேசு ஆண்டவர் சொன்ன உவமையில் உள்ள ஸ்திரீயானவள், தான் தொலைத்த வெள்ளிக்காசைக் கண்டுபிடிப்பதற்கான முதல் முயற்சியாக, விளக்கைக் கொளுத்தினாள். ஒரு வேளை, விளக்கைக் கொளுத்தி ஒளியேற்றாமல் அவள் முயற்சி செய்திருப்பாளேயானால் அந்த முயற்சி கண்டிப்பாக வீணாகத் தான் போயிருந்திருக்கும்.

அருமையானவர்களே, இந்த உவமையை இயேசுவானவர், ஏதோ அந்த ஸ்திரீ தொலைத்த வெள்ளிக்காசின் மதிப்பை நாம் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. மாறாக, ஜீவாத்துமாவாய் படைக்கப்பட்ட மனிதன், நித்திய காலத்திற்கும் அழியாமல் வாழக்கூடிய ஆத்துமாவின் அருமையைப் புரிந்து கொள்ள வேண்டுமென்றே கூறியுள்ளார். அப்படியானால், அந்த ஸ்திரீ தொலைத்த காசைக் கண்டுபிடிக்க விளக்கின் ஒளி பயன்பட்டது போல, மனிதனின் இழந்துபோன ஆத்துமாவைக் கண்டுபிடிக்க நமக்குப் பயன்படும் ஒளி எது? பரிசுத்த எழுத்துக்கள் இதுபற்றி என்ன கூறுகிறது?.

இயேசுவை "வார்த்தையாக" வர்ணித்து தன் நற்செய்தி நூலை எழுத ஆரம்பிக்கும் யோவான் நற்செய்தியாளன், தொடர்ந்து கீழே வரும்போது, "அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது" (யோவான் 1:4) என்று எழுதி, இயேசுவை "மனிதருக்கு ஒளி" என்கிறார்.

இன்னும், ஒரு ஐந்து வசனங்கள் தள்ளி, "மனிதனைப் பிரகாசிக்கும் மெய்யான ஒளி" இயேசு என்கிறார் (1:9). மேலும், பவுலும், பர்னபாவும் பிசிதியா அந்தியோகியாவில் பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் தேவ வசனத்தைப் பிரசங்கித்த போது, இயேசுவை "புறஜாதிகளுக்கு ஒளி" என்று குறிப்பிட்டுள்ளார்கள் (அப். 13:47). இக்கருத்துகளுக்கெல்லாம் மகுடமாக இயேசு ஆண்டவரே தன்னைக் குறித்து குறிப்பிடும் போது, "நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்" என்றார் (யோவான் 9:5). ஆக, இவ்வசனங்கள், இயேசுவை "மனிதருக்கு ஒளி" என்றும், "பிரகாசிப்பிக்கும் மெய்யான ஒளி" என்றும், "புறஜாதிகளுக்கு ஒளி" என்றும், "உலகத்திற்கே ஒளி" என்றும் கூறுகிறது. இவை அனைத்தும் ஆவிக்குரிய பொருளிலே தான் கொடுக்கப்பட்டுள்ளதென்பதை நாம் நன்கறிவோம்.

அப்படியானால், இவைகளனைத்தும் நமக்குச் சொல்லும் ஆவிக்குரிய உண்மை என்ன? ஆத்துமாவைத் தொலைத்தவர்களாய் வாழ்ந்து கொண்டிருக்கும் மனுக்குலத்துக்கான ஒளியாக இயேசு ஆண்டவர் இருக்கிறார் என்பதே. ஆகையால், தொலைந்து போன வெள்ளிக் காசுக்காக அந்த ஸ்திரீ விளக்கைக் கொளுத்தியது போல், இழந்து போன ஆத்துமாவை மீட்டெடுக்க இயேசுவாகிய ஒளியை நம் ஆன்மீக வாழ்வில் கொளுத்த வேண்டும். இங்கே, இயேசுவாகிய ஒளியை ஒருவனுடைய வாழ்க்கையில் எப்படி கொளுத்துவது என்ற கேள்வி வருகிறது. அப்படித்தானே. இதைப் புரிந்து கொள்ள சங்கீதம் 119:105-ம் வசனத்தைக் கவனியுங்கள். "உம்முடைய வசனம் என் கால்களுக்குக் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது" என்றுள்ளது. அதாவது, வேத வசனங்கள் "ஒளியாகவும், வெளிச்சமாகவும்" உள்ளதென்று கூறுவதை நாம் பார்க்க வேண்டும். இயேசுவும், அவருடைய வார்த்தைகளும் ஒளி என்று ஆவியானவர் வெளிப்படுத்தியுள்ளார்.

ஆக, இயேசுவாகிய ஒளியை நம் வாழ்க்கையில் கொளுத்துவதென்பதும், இயேசுவின் வார்த்தைகளை நம் வாழ்க்கையில் ஏற்றுக்கொள்வதென்பதும் ஒன்றுதான். இங்கே இன்னொரு கேள்வியும் வருகிறது. அப்படியானால், இயேசுவின் வார்த்தைகள் எங்கே இருக்கிறது? என்று. யோவான் 14:26 மற்றும் யோவான் 16:13ன் படி இயேசுவின் வார்த்தைகள் இன்றைக்கு நம்மைக் கட்டுப்படுத்தும் புதிய ஏற்பாட்டில் தான் இருக்கிறது. ஆகையால், இழந்துபோன ஆத்துமாவை மனிதன் மீட்டெடுக்க வேண்டுமானால், அவன் முதலாவது, இயேசுவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்தைத் தன் வாழ்வில் ஒளி கொடுக்கும்படியாய் ஏற்றி, அவைகளைத் தன் ஆன்மீக வாழ்க்கையிலும் ஏற்றுக் கொள்வது மிகவும் அவசியம்.

## II வீட்டைச் சுத்தம் செய்தாள்

"காணாமல் போன காசு" உவமை நமக்குக் கற்றுக் கொடுக்கும், இரண்டாவது பாடம், தொலைந்து போன ஒன்றைக் கண்டுபிடிப்பதற்கு, "சுத்தம் செய்வது" அவசியம் என்பது.

இயேசுவானவர் சொன்ன உவமையில், அந்த ஸ்திரீயான வள், விளக்கைக் கொளுத்தியதோடு, வீட்டைப் பெருக்கி சுத்த மும் செய்துள்ளாள். காணாமற் போன காசைக் கண்டுபிடிப்பதற்கு கொளுத்தின விளக்கின் ஒளியோடு, பெருக்கி சுத்தம் செய்வதும் அவசியமாயிருந்திருக்கிறது. ஒருவேளை அவள் விளக்கைக் கொளுத்தியதோடு, தன் வேலை முடிந்ததென்று நினைத்திருப்பா ளானால் கண்டிப்பாக தொலைந்த வெள்ளிக்காசு கிடைத்திருக்காது.

"விளக்கைக் கொள்ளுத்துதல்" என்பது இயேசுவின் புதிய ஏற்பாட்டு உபதேச ஒளியை ஏற்றுக்கொள்வதென்பதைக் குறிக்கிற தென்று பார்த்தோம். ஆனால், அப்படி ஏற்றுக்கொள்வதோடு நிறுத்திக்கொள்ளாமல், இயேசுவின் உபதேச ஒளியைக் கொண்டு மனம் என்னும் இருதயமாகிய வீட்டைச் சுத்தம் செய்ய வேண்டும் (மத். 5:8) அப்பொழுது தான், இழந்துபோன ஆத்துமாவை நாம் மீட்டெடுக்க முடியும்.

இந்த உண்மையை மேலும், விளங்கிக் கொள்வதற்கு, புதிய ஏற்பாட்டில் காணப்படும் அநேகருக்கு அறிமுகமான ஒரு வேதாகம பாத்திரத்தை உங்கள் முன் கொண்டு வருகிறேன். அவன் வேறு யாருமல்ல, "குள்ளனான சகேயு" தான். இயேசுவைப் பார்க்கும்படி மிகவும் பிரயாசை எடுத்து காட்டத்தி மரத்தின் மேல் அவன் ஏறினான். அங்கே "சகேயுவே நீ சிக்கரமாய் இறங்கி வா, இன்றைக்கு நான் உன் வீட்டில் தங்க வேண்டும்" என்றார் இயேசு. அப்பொழுது அவன் சீக்கிரமாய் இறங்கி, சந்தோஷத் தோடே அவரை அழைத்துக் கொண்டு போனான்" (லூக் 19:26). அங்கே, சகேயு தன் செய்கையின் மூலம் இயேசுவின் உபதேசம் முழுமையாக வெளியாக்கப்படாத அந்த நாட்களில், ஒளியாகிய இயேசுவைத் தன் இருதயத்தில் ஏற்றுக் கொண்டு, அத்தோடு நிறுத் தாமல், "ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக் குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியா யமாய் வாங்கினதுண்டானால் நாலத்தனையாகத் திரும்ப செலுத் துகிறேன் என்றான்" (லூக் 19:8) இப்படியாக அவன் இயேசு வாகிய ஒளியை தன்னில் ஏற்றுக் கொண்டதோடு, பாவக்கறை பிடித்த தன் இருதயத்தைச் சுத்தம் செய்தபடியால் தான் "... இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது ..." என்றார் இயேசு.(19:9) இயேசுவாகிய ஒளியை அறிந்தும், இருதயமாகிய

வீட்டை அவன் சுத்தம் செய்யாமல் இருந்திருந்தால் கண்டிப்பாக அவனுக்கு இரட்சிப்பு வந்திருக்காது.

அருமையானவர்களே, இதிலிருந்து நமக்குத் தெரிவது என்ன? இயேசுவாகிய ஒளியை அறிந்து கொள்வதோடு நிற்காமல், இன்றைக்கு இயேசுவால் கொடுக்கப்பட்ட பூரண பிரமாணமாகிய (யாக் 1:25) புதிய ஏற்பாட்டு உபதேசத்தை நாம் ஒவ்வொருவரும் ஏற்றுக் கொண்டு, அவைகளை நம்முடைய பக்தி வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தோடும் ஒப்பிட்டுப் பார்த்து, சகேயு போல, இயேசுவின் எதிர்ப்பார்ப்பிற்கு மாறாகவும், சத்தியத்திற்கு விரோதமாகவும் இருக்கும் ஒவ்வொன்றையும் நாம் களைந்து போட வேண்டும்.

ஆகையால், இயேசுவின் உபதேசத்தோடு நம்முடைய பக்தி வாழ்க்கைக்கான காரியங்களை ஒப்பிட்டுப் பார்த்து நம்மைத் திருத்துவது மிகவும் அவசியம். ஒருவேளை, அது பாவமன்னிப்புக்கான ஞானஸ்நானமாக இருந்தாலும், தேவனுக்கான ஆராதனையாக இருந்தாலும், பக்தி வாழ்க்கைக்கான உபதேசங்களாக இருந்தாலும் அவைகள் ஒவ்வொன்றும் கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்ட உபதேசப்படி இருக்கிறதா என்று பார்த்து, ஒருவேளை வேத வசனங்களுக்கு எதிரானவைகளை நாம் பின்பற்றிக் கொண்டிருப்போமானால், சகேயு போல அவைகளுக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டு, கிறிஸ்துவின் உபதேசத்தால் நாம் நம்மைச் சுத்தப்படுத்த வேண்டும். அப்பொழுது தான் இழந்து போன ஆத்துமாவையும், இழந்து போன புதிய ஏற்பாட்டு முறைகளனைத்தையும் நாம் மீட்டெடுக்க முடியும்.

## III. கண்டுபிடிக்கும் வரைக்கும் ஜாக்கிரதையாய்த் தேடினாள்

"காணாமல் போன காசு" உவமை நமக்குக் கற்றுக் கொடுக்கும் இன்னுமொரு பாடம், தொலைந்து விட்ட ஒன்றை ஒருவன் கண்டுபிடிக்க, "கண்டுபிடிக்கும் வரைக்கும் ஜாக்கிரதையாய் தேடுவது அவசியம்" என்பது.

இயேசு ஆண்டவர் சொன்ன உவமையில், அந்த ஸ்திரீ தொலைத்த காசைக் கண்டுபிடிக்க, விளக்கைக் கொளுத்தி, சுத்தம் செய்ததோடு நிறுத்தியிருந்தால், தொலைந்த காசு கண்டிப்பாக கிடைத்திருக்காது. இந்த உவமையில் இயேசு ஆண்டவர் பயன்படுத்தியிருக்கும் ஒரு விசேஷித்த சொற்றொடரை நாம் குனிந்து கவனிக்கக் கடமைப்பட்டுள்ளோம். அது, "கண்டுபிடிக்கிற வரைக்கும்" என்பது. ஆம், அந்த தேடுதல், தொலைந்ததைக் கண்டுபிடிக்கிற வரைக்கும் இருக்க வேண்டியது அவசியம் என்று இயேசு கூறியுள்ளார்.

அப்படியானால், எனக்கன்பானவர்களே, நம்முடைய ஆன்மீக வாழ்க்கையில், நாம் தொலைத்து விட்ட பக்தி நிலைக்கான தேடுதல், இந்த உவமையில் இயேசு ஆண்டவர் கூறுவது போல் உள்ளதா? அதாவது, "ஜாக்கிரதையும்", "விடாமுயற்சியும்" உள்ளதா? "தன் வேலையில் அசதியாயிருப்பவன் அழிம்பனுக்குச் சகோதரன்" (நீதி 18:9) என்று ஆவியானவர் கூறுவதை நம் இங்கே, நினைவில் நிறுத்திக்கொள்வது அவசியம்.

தேடுதல் ஜாக்கிரதையாகவும், கண்டுபிடிக்கிறவரைக்கும் இருக்க வேண்டுமானால், முதலாவது தொலைத்ததின் மதிப்பு தெரிந்திருக்க வேண்டும். இல்லையெனில், அந்தத் தேடுதல் முறையானதாகவும், முழுமையானதாகவும் இருக்காது. அப்படியானால், ஆன்மீக வாழ்வில், மிகப்பெரும்பாலான இப்பூவுலக மாந்தரால் தொலைக்கப்பட்டிருக்கும். "ஆன்மா"வின் மதிப்பு தான் என்ன? "அது உலக முழுவதைக் காட்டிலும் விலையுள்ளது". என்று இயேசு ஆண்டவரே கூறியுள்ளதை நாம் கவனிக்க வேண்டும். (மத் 16:26). "மேலும், தேவனுக்குச் சொந்தமானது" (எசே 18:3,4)என்று எசேக்கியேல் தீர்க்கன் கூறியுள்ளார். இன்னும் ஆன்மா "அழியாத்தன்மை உள்ளது" என்றும் இயேசு ஆண்டவர் கூறியுள்ளார் (மத் 10:28). இப்படி, இவ்வளவு சிறப்பும், நித்திய முக்கியத்துவமும் கொண்ட ஆத்துமாவை ஒருவன், இயேசுவாகிய விளக்கைக் கொளுத்தி, அவருடைய உபதேசத்தைக் கொண்டு, இருதயமாகிய வீட்டை சுத்தம் செய்து, "பாவங்களினாலும், அக்கிரமங்களினாலும் "தேவனிடமிருந்து இழக்கப்பட்ட (ஏசா 59:1,2) ஆத்துமாவை, மீண்டும் தேவனோடு ஒப்புரவாக்கும் வரைக்கும்" ஜாக்கிரதையாக முயற்சிக்க வேண்டும்.

இழந்து போன ஒன்றை ஜாக்கிரதையாகவும், கண்டுபிடிக்கும் வரைக்கும் தேட வேண்டுமென்பதற்கு மிகச்சிறந்த உதாரணம், யோசேப்பும், மரியாளும் தான். ஆம், 12 வயது பாலகன் இயேசுவை பண்டிகைக்காக எருசலேமுக்கு அழைத்துச் சென்று, கூட்டத்தோடு கூட்டமாகத் திரும்பும் வழியில், அவர் பிரயாணக்காரரின் கூட்டத்திலிருப்பார் என்று நம்பி ஏமாந்து, பிறகு அவரைத் தொலைத்துவிட்டதை உறுதி செய்து, பதறியடித்து, தேடிக்கொண்டே எருசலேமுக்குப் போய், கடைசியாக அவர் தேவாலயத்தில் போதகர் நடுவே இருப்பதைக் கண்டுபிடித்தார்கள் (லூக்கா 2:42-49) அங்கே, இழந்து போன இயேசுவைத் தேடுவதற்கு எப்படிப்பட்ட ஜாக்கிரதையும், கண்டுபிடித்தே ஆக வேண்டுமென்ற தீர்மானமும் யோசேப்புக்கும், மரியாளுக்கும் இருந்ததோ அதைப் போன்ற ஒரு ஜாக்கிரதையான முனைப்பும், தீவிரமான முயற்சியும் இழந்து போன நம் ஆத்துமாவைக் கண்டு

பிடிக்கும் காரியத்திலும், இழந்து போன பக்தி வாழ்வைத் தேடும் காரியத்திலும் இருக்க வேண்டியது அவசியம். ஆனால், இப்படிப்பட்ட ஜாக்கிரதையும், விடாமுயற்சியும் நம்முடைய ஆன்மீக வாழ்க்கையில் நமக்கு இருக்கிறதா என்று நம்மை நாமே சோதித்துப் பார்ப்பது மிகவும் அவசியம்.

அருமையானவர்களே, இயேசு ஆண்டவர் சொல்லியிருக்கும் இந்த எளிய உவமையின் மெய்ப்பொருளை, நானும், நீங்களும் இப்பூமியின் வாழ்க்கையில் உணர்ந்து செயல்படா விட்டால், இழந்து போன நம்முடைய ஆத்துமாவை மீட்டெடுக்கவோ, இழந்து போன நம்முடைய பரத்துக்கடுத்த வாழ்வைப் பாதுகாப்பாக நடத்தவோ முடியாது.

எப்படி இயேசுவின் உவமையில், தொலைந்து போன காசைக் கண்டுபிடித்தபின் அந்த ஸ்திரீக்கு சந்தோஷம் வந்ததோ, அதுபோல, அப்போஸ்தலர் 8-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கும் எத்தியோப்பிய மந்திரிக்கும், இழந்து போனதன் ஆத்துமாவைக் கண்டுபிடித்த பின்தான் சந்தோஷம் வந்திருக்கிறது. ஆம், பிலிப்பும், மந்திரியும் தண்ணீரிலிருந்து கரையேறின பொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டு போய்விட்டார். மந்திரி அப்புறம் அவனைக் காணாமல், "சந்தோஷத்தோடே" தன் வழியே போனான் என்றுள்ளது (அப் 8:39). இதிலிருந்து நமக்கு என்ன தெரிகிறது? நிதி மந்திரியாக இருந்த இவனுக்கு எல்லாம் இருந்தது பணமும், பொருளும், பதவியும், பட்டமும், பகட்டான வாழ்க்கையும் ஒருவனுக்கு உண்மையான சந்தோஷத்தைத் தருவதில்லை என்பதையே இது காட்டுகிறது. மெய்யான மகிழ்ச்சி இல்லாதவனாகவே இருந்துள்ளான். ஆனால், இயேசுவாகிய ஒளியை அறிந்து, இயேசுவின் வார்த்தைகளை ஊழியக்காரனாகிய பிலிப்புவின் மூலம் கேட்டு, தன் இழந்து போன நிலையை அறிந்து, தன்னை பாவங்களறச் சுத்திகரிக்க ஒப்புக் கொடுத்த பொழுது தான், உலகம் கொடுக்க முடியாத சந்தோஷத்தைப் பெற்றுக்கொண்டான். ஒரு பாவி மனந்திரும்புவதால் உண்டாகும் சந்தோஷம் சம்பந்தப்பட்டவர்களுக்கு மாத்திரம் கிடைக்காமல் பரலோகத்திலுள்ள தேவதூதர் மத்தியிலும் ஏற்படுத்துகிறது (லூக்.15:10).

ஆகையால், இப்படிப்பட்ட மெய்யான மகிழ்ச்சியை ஆசானின் அன்பான வாசகர்கள் ஒவ்வொருவரும் "காணாமல் போன காசு" உவமையினடிப்படையில் பெற்று, பரலோக பாக்கியத்துக்கான உத்திரவாதத்தைப் பெற்றுக்கொள்ள நாம் ஒவ்வொருவரும் நம்மை இயேசுவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்துக்கு ஒப்புக்கொடுப்போமாக! ஆமென்.

**E.Z.S. இராஜநாயகம்**

# நாம் ஏன் தேவனை விசுவாசிக்கிறோம்?

இன்றைய உலகம் முரண்பட்ட ஒன்றாயிருக்கிறது. ஒரு பக்கத்தில் தேவன் ஒருவர் இருக்கிறார் என்பதை விசுவாசிக்காத மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் தேவன் இருப்பதை மறுக்கிறார்கள். இந்த உலகமானது ஒரு விபத்தினால் அல்லது தற்செயலாக உருவானது என்றும், மனிதன் கீழான ஜந்துகளின் சந்ததி என்றும் சொல்கிறார்கள். இந்த ஜனங்கள் அவர்கள் மனிதனை விட மேலான ஒருவருக்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்பதை விசுவாசிப்பதில்லை. இன்னொரு பக்கத்தில், ஒன்று அல்லது அதிகமான கடவுள்கள் இருக்கிறார்கள் என்பதை விசுவாசிக்கிற மக்கள் இன்று இந்த உலகில் இருக்கிறார்கள். இவர்களில் பெரும் பாலானோர் சொரூபங்களும், விக்கிரகங்களும் தங்கள் தெய்வங்களுக்கு பிரதிநிதிகளாக இருக்கின்றன என்று நம்புகிறார்கள். இந்த காரியங்களில் நீங்கள் எங்கே நிற்கிறீர்கள்? நீங்கள் எதை நம்புகிறீர்கள்?.

நான் ஒரு கிறிஸ்தவனும், கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினருமாயிருக்கிறேன். ஆகையால், என் சகோதரரும், நானும் தேவனை விசுவாசிக்கிறோம். நாங்கள் ஒன்றான மெய் தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசிக்கிறோம், அவர் ஜீவனுள்ள தேவன், சர்வ சிருஷ்டிகர், சர்வ வல்லவர், சர்வஞானி, எல்லாவற்றையும் காண்கிறவர் என்றும் விசுவாசிக்கிறோம். மேலும், அவர் நித்தியமானவர், ஆவியாயிருக்கிறார், சர்வ வியாபி என்றும் விசுவாசிக்கிறோம். நீங்கள் தேவனிடத்தில் விசுவாசம் வைக்க நாங்கள் உங்களை உற்சாகப்படுத்த விரும்புகிறோம்.

நாங்கள் ஏன் தேவனை விசுவாசிக்கிறோம் என்று நீங்கள் ஆச்சரியப்படலாம். எங்கள் விசுவாசத்தைக் குறித்து கேள்வி கேட்க உங்களுக்கு எல்லா உரிமையும் உண்டு. ஆகையால், நாங்கள் தேவனை ஏன் விசுவாசிக்கிறோம் என்பதற்கான சில காரணங்களை உங்களுக்கு கொடுக்க விரும்புகிறோம்.

முதலாவது, தேவன் இருக்கிறார், அவர் எல்லாவற்றையும் உண்டாக்கினார் என்பதை விசுவாசிப்பதற்கு நியாய மாய் இருக்கிறபடியால் நாங்கள் தேவனை விசுவாசிக்கிறோம். எல்லா ஜீவராசிகளோடும் இப்பூமி இருக்கிறது என்கிற உண்மை இதற்கு யாரோ ஒருவர் பொறுப்பு என்பதை நிச்சயமாகக் காட்டுகிறது. ஒரு புத்தகத்திற்கு எப்படி ஒரு ஆசிரியர் இருக்கிறாரோ, ஒரு வீட்டிற்கு எப்படி அதை கட்டினவர் இருக்கிறாரோ, ஒரு வாகனத்திற்கு எப்படி அதை உருவாக்கினவர் இருக்கிறாரோ அதைப் போல் தான் பூமியையும், அதில் குடியிருப்பவர்களையும், உண்டாக்கினவர் ஒருவர் இருக்கிறார். வேதாகமத்தின் முதல்

வார்த்தைகளில் நாம் இப்படியாக வாசிக்கிறோம் ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார் (ஆதி. 1:1) என்று.

இரண்டாவது, சர்வ சிருஷ்டிகரான பரலோகத்தின் தேவனை நாங்கள் விசுவாசிப்பதற்கான காரணம் என்ன வென்றால், இந்த பூமியில் அறிவுப்பூர்வமான வாழ்க்கை தான். இந்த பூமியானது தாவரங்களையும், மிருகங்களையும் மாத்திரம் உடையதாயிராமல், மனிதனும் இந்த பூமியில்தான் இருக்கிறான். அவன் இருக்கின்ற மற்ற ஜீவராசிகளோடு ஒப்பிடும் போது உயர் வானவனாயிருக்கிறான். மனித இனத்திற்கு மட்டும் தான் சிந்திக்கும் திறனும், காரண காரியங்களை அறியும் திறனும் இருக்கிறது. அது மட்டுமல்ல, காலப் போக்கில் மனிதன் தன் அறிவில் அபரிதமான வளர்ச்சியை அடைந்திருக்கிறான். அதன் பொருள் என்னவென்றால், மனிதனுக்கு தன்னுடைய மூதாதைய ரிடமிருந்து கற்றுக் கொள்ளும் திறனும், அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்ட அறிவை வளர்த்துக் கொள்ளும் அறிவும் இருக்கிறது. அதன் பொருள் என்னவென்றால், ஒரு புத்திசாலி யான சிருஷ்டிகர்தான் மனிதனுக்கு பொறுப்பாளியாயிருக்கிறார். ஆனால், மிருகத்தின் வாழ்க்கையை மறுபடியும் பாருங்கள். அது, ஆரம்பத்திலிருந்தே ஒரே மதிரியாகத்தான் இருக்கிறது. அதன் பொருள் ஞானமுள்ள சிருஷ்டிகர் மிருக ஜீவன்களையும், மற்றெல்லாவற்றையும் மனிதனுடைய பயன்பாட்டிற்காக வைத்திருக்கிறார். வேதாகமத்தின் ஆதியாகமம் ஒன்றாம் அதிகாரத்திற்கு திரும்பும் போது, தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்து விட்டு, பின்பு பூமியில் ஊர்வன, ஆகாயத்து பறவைகள், கடல் மீன்கள் உட்பட எல்லாவற்றையும் அதில் சிருஷ்டித்தார் என்று நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது. அதன் பின்பு, கடைசியாக தேவன் மனுஷனையும், மனுஷியை யும் சிருஷ்டித்தார். ஆதியாகமம் 1:28ல் நாம் இப்படியாக வாசிக்கிறோம். பின்பு தேவன் அவர்களை நோக்கி; நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத் தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின் மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துகளையும் ஆண்டு கொள்ளுங் கள் என்று சொல்லி தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்.

மூன்றாவது, மனிதன் ஆவியை உடையவனாகவும், சரீரத்தை உடையவனாகவும் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறபடியால் தேவன் தான் மனிதனுடைய சிருஷ்டிக்கர்த்தா என்று நாங்கள் விசுவாசிக்கிறேம். தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார். அவனைத் தேவ சாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும், பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார் என்று ஆதி யாகமம் 1:27ல் நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. மறுபடியும், நாம் இப்படியாக வாசிக்கிறோம். தேவனாகிய கர்த்தர் மனுஷ னைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான் (ஆதியாகமம் 2:7). இதைப் புரிந்து கொள்வதற்கு தேவன்

ஆவியாயிருக்கிறார் என்கின்ற உண்மையை நாம் அறிந் திருக்க வேண்டும் (யோவான் 4:24). மனிதன் தேவ சாயலில் சிருஷ்டிக் கப்பட்டான் என்று சொல்லும்போது, அதன் பொருள், தேவன் மனிதனை என்றென்றும் அழியாத ஆத்துமாவை உடையவனாக சிருஷ்டித்திருக்கிறார் என்பதாகும். சரீரத்தையும், ஆத்துமாவை யும் பற்றி பேசும் போது, ஞானி சாலொமோன் இப்படியாகச் சொல்கிறார். "இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத்தந்த தேவனிடத்திற்கு மறுபடி யும் போகாததற்கு முன்னும், அவரை உன் வாலிபப் பிராயத்தி லே நினை" (பிரசங்கி 12:7) என்று. இது சரீரமானது மரித்து பூமியின் மண்ணுக்கு திரும்புவதைக் குறிக்கிறது, ஆனால், மனிதனு டைய ஆவியானது தொடர்ந்து வாழ்ந்து தன்னைத் தந்த தேவனி டத்திற்கு திரும்பும். இதுவே மனிதன் தேவனை விசுவாசிப்ப தற்கு மற்றுமொரு ஊக்ககாரணியாகும். தேவனை மறுக்கிறவர் களைப் பொறுத்த வரை, இவைகளையெல்லாம் மனிதன் எதிர் நோக்கியிருக்க வேண்டும். ஆனால், தேவனை விசுவாசிக்கிறவர் இவ்விதமான வாழ்க்கையை அவர் பெற்றிருப்பது மாத்திர மல்ல, அவருடைய சரீரமரணத்திற்குப் பிறகு அவருடைய ஆவி அல்லது ஆத்துமா என்றென்றும் வாழும். இயேசு இப்படியாகச் சொன்னார். இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம்; ஏனென்றால், "பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்; அப்பொழுது நன்மை செய்த வர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிற வர்களாகவும் புறப்படுவார்கள்" (யோவான் 5:28,29)

நான்காவது, தேவனுடைய சிருஷ்டிப்பின் ஒற்றுமையினால் நாங்கள் அவரை விசுவாசிக்கிறோம். காலங்கள், தட்பவெப்ப நிலை, தாவரங்கள், கடல் ஜீவன்கள் மற்றும் மனித ஜீவன் இந்த பூமியில் ஒன்றிணைந்து வாழ்ந்து, ஒவ்வொன்றும் மற்றொன்றை முழுமையாக்குகிறது. ஒவ்வொன்றும் பிழைப்பதற்கு மற்றொன் றை சார்ந்திருக்கிறது. ஆனால், சூரியன், சந்திரன் நட்சத்திரங்கள் எல்லாம் எப்படி? அவைகள் எல்லாம் சரியான தூரத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. உதாரணத்திற்கு, சூரியன் பூமிக்கு சற்று அருகில் இருந்தால் கூட அதிக வெப்பத்தினால் பூமி அழிக்கப் பட்டு விடும், அதே நேரத்தில் சூரியன் பூமியிலிருந்து சற்று தூரத்தில் இருந்தால் கூட அதிக குளிர்காரணமாக பூமி உறைந்து விடும். எத்தனை ஆச்சரியம் தேவனுடைய சிருஷ்டிப்பு! முன்பொரு காலத்தில் சங்கீதக்காரனாகிய தாவீது தேவனை இப்படியாக புகழ்ந்து பாடியிருக்கிறார். "வானங்கள் தேவனு டைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு அவரு டைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. பகலுக்குப் பகல் வார்த்தைகளைப் பொழிகிறது, இரவுக்கு இரவு அறிவைத் தெரி விக்கிறது. அவைகளுக்குப் பேச்சுமில்லை, வார்த்தையுமில்லை,

அவைகளின் சத்தம் கேட்கப்படுவதுமில்லை. ஆகிலும் அவை களின் சத்தம் பூமியெங்கும், அவைகளின் வசனங்கள் பூச்சக்கரத் துக் கடைசி வரைக்கும் செல்லுகிறது; அவைகளில் சூரியனுக்கு ஒரு கூடாரத்தை ஸ்தாபித்தார். அது தன் மணவறையிலிருந்து புறப்படுகிற மணவாளனைப் போலிருந்து, பராக்கிரம சாலியைப் போல் தன் பாதையில் ஓட மகிழ்ச்சியாயிருக்கிறது" (சங்கீதம் 19:1-5).

ஐந்தாவது, தேவன் இருக்கிறார் என்பதை நீங்கள் விசுவாசிப்பதற்கான காரணம் என்னவென்றால், வேதாகமம் இதை போதிப்பது தான். வேதாகமம் தேவனுடைய வார்த்தை களை உள்ளடக்கிய, முழு உலகத்திலும் சிறந்த புத்தகமாகத் திகழ் கிறது. இந்தப் புத்தகம் தேவன் சர்வத்தையும் சிருஷ்டித்தார் என்ப தை சித்தரிக்கிறது. மேலும், வேதாகமம் தேவனை வல்லமை யுள்ள தேவனாக, நித்தியப் பிதாவாக (ஏசாயா 9:6) மெய்யான ஜீவனுள்ள தேவனாக (எரேமியா 10:10) காட்டுகிறது. அது மட்டுமல்ல, வேதாகமம் தேவன் ஆவியாயிருக்கிறார் என்றும் (யோவான் 4:24), தேவன் அன்பாகவே இருக்கிறார் என்றும் (1யோவான் 4:8), அவர் பட்சபாதமுள்ளவரல்ல என்பதையும் காட்டுகிறது (ரோமர் 2:11). தேவன் சோதிக்கப்படுகிறவரல்ல என்பதையும் காட்டுகிறது (யாக்கோபு 1:13). நம்மை அவரோடு பரிச்சயப்படுத்தவும், அவர் தம்முடைய சிருஷ்டிப்போடு எப்படி இடைபடுகிறார் என்பதையும் நாம் காணும்படியாகவும் நூற்றுக்க ணக்கான வேறு காரியங்கள் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆறாவது, அவர் ஒரே தேவனாக சொல்லப்பட்டிருக்கிற படியால் நாங்கள் தேவனை விசுவாசிக்கிறோம். எனவே, தேவனை மிஞ்சினவர் யாருமே இல்லை. பவுல் எபேசியர் 4:6ல் இப்படியாக அறிவிக்கிறார் எல்லாருக்கும் ஒரே தேவனும், பிதா வும் உண்டு; அவர் எல்லார் மேலும், எல்லாரோடும் உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர்; நம் தேவன் எரிச்சலுள்ள தேவ னாயிருக்கிறார். அவர் தம்முடைய சிருஷ்டி உயிரற்ற சொரூபங் களையும், விக்கிரகங்களையும் பணிந்து கொள்வதை விரும்ப மாட்டார். நீண்ட காலத்திற்கு முன்பாகவே இப்படியாகச் சொல்லப்பட்டது. அந்நிய தேவனை நீ பணிந்து கொள்ள வேண்டாம் (யாத்திராகமம் 34:14). மறுபடியும், நாம் யாத்தி ராகமம் 34:17ல் வார்ப்பிக்கப்பட்ட தெய்வங்களை உங்களுக்கு உண்டாக்க வேண்டாம் என்று சொல்லப்பட்டிருப்பதை வாசிக்கி றோம். மற்றுமொரு சூழ்நிலையில், தேவன் இப்படியாகச் சொன்னார். "மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம், நீ அவைகளை நமஸ்கரிக்கவும், சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து என்னைப் பகைக்கிறவர் களைக் குறித்துப் பிதாக்க ளுடைய அக்கிரமத்தைப் பிள்ளைக ளிடத்தில் மூன்றாம், நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிற

வராயிருக்கிறேன். என்னிடத்தில் அன்பு கூர்ந்து, என் கற்பனை களைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலை முறை மட்டும் இரக்கஞ் செய்கிறவராயிருக்கிறேன் (யாத்திராகமம் 20:4-6) விக்கிரக ஆராதனை நியாயமற்றது என்பதைக் காட்டு வதற்கு வேத வசனங்கள் மூலமாக இன்னுமொரு உதாரணத்தை நாம் காணலாம். ஒரு மனுஷன் ஒரு மரத்துண்டை எரித்து குளிர்காய் கிறான்; நெருப்பை மூட்டி அப்ப மும் சுடுகிறான். அதினால் ஒரு தெய்வத்தையும் உண்டு பண்ணி, அதைப் பணிந்து கொள்ளு கிறான், ஒரு விக்கிரகத்தையும் அதினால் செய்து அதை வணங்கு கிறான் (ஏசாயா 44:15).

ஏழாவது, நாங்கள் தேவனை விசுவாசிப்பதற்கான காரணம் என்னவென்றால், நாம் இரட்சிக்கப்படவும், நித்திய ஜீவனுக்கான நம்பிக்கையை உடையவர்களாகும்படி நமக்காக தம்முடைய ஒரே பேறான குமாரனை அனுப்பிக் கொடுத்ததினால் தேவன் நமக்கு இரக்கத்தை நீட்டியிருக்கிறார் (யோவான் 3:16,17; ரோமர் 5:8; எபேசியர் 2:8,9).

கடைசியாக, நாங்கள் தேவனை ஏன் விசுவாசிக்கிறோம் என்றால் நாங்கள் அப்படி விசுவாசியாமல் போனால் அதற்கு மாற்றாக தேவன் என்கின்ற கருத்தையும், நித்திய ஜீவன் என்கின்ற கருத்தையும் போன்றவைகளை நிராகரிக்க வேண்டியதாயிருக் கும் அதுமட்டுமல்லாமல், எல்லா காரியங்களுமே ஒரு விபத்தாக, தற்செயலாக நடந்தது என்றும், மனிதன் கீழான விலகாகிய குரங் கிலிருந்து பரிணாம வளர்ச்சியினால் மனிதனாக மாறியிருக்கிறான் என்கின்ற கருத்தை ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிருக்கும். இது வெறும் கொள்கை தான், இது நிரூபிக்கப்படாத நியாய மற்ற ஒன்று. சங்கீதக்காரன் இப்படியாகச் சொன்னார். தேவன் இல்லை என்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்ளுகிறான் (சங்கீதம் 14:1). தேவனை நிராகரிக்கிறவர்கள் அப்படிச் செய்வ தற்கு சுதந்தரத்தைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால், நமக்கு இப்படியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப்படி; முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும், நாவு யாவும் தேவனை அறிக்கை பண்ணும் என்று என் ஜீவனைக் கொண்டு உரைக்கி றேன் என்பதாய்க் கர்த்தர் சொல்கிறார் என்று எழுதியிருக்கிறது. ஆதலால், நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக் குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான் (ரோமர் 14:11,12).

நீங்கள் தேவனை விசுவாசிக்கிறீர்களா? அப்படி இல்லை யென்றால் தயவு செய்து என்ன சொல்லப் பட்டிருக்கிறதோ அதை சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் தேவனையும், அவருடைய குமார னாகிய கிறிஸ்துவையும் விசுவாசித்து, உங்கள் பாவங்களிலி ருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று உங்கள் வாயினால் அறிக்கை செய்து, பாவமன்னிப்புக்கென்று தண்ணீர் ஞானஸ்நானம் பெற்றால், கர்த்தர் தம்முடைய சபையி லே உங்களை சேர்த்துக் கொள்வார். நீங்கள் அப்படி செய்வீர்கள் என்பது தேவனிடத்தில் எங்கள் ஜெபமாயிருக்கிறது.

**J.C. சோட்**

# அவளுடைய பக்தியாலே

பெண் என்பவள் மரியாதைக்குரியவளா? நாம் வாழும் இவ்வுலகில் இக்கேள்வியைக் கேட்டால், பலவிதமான பதிலைப் பெற்றுக்கொள்ள முடியும். சில கலாச்சாரத்தில் பெண்கள் சகல வற்றிற்கும் சுதந்திரவாளியாக உள்ளனர். குடும்பங்களே கூட பெண்களின் பெயராலே விளங்குகிறது. இன்னும் சில கலாச்சா ரங்கள், பெண்ணின் திருமணத்திற்கு வரதட்சணை என்ற பெயரால் பெரும் பணம் செலவழிக்க வேண்டியிருப்பதால், பெற்றோர்களுக்கு அவர்கள் பாரமாகிவிடுகின்றனர். கருக் கலைப்பு என்ற கொலையை கூசாமல் செய்கின்றவர்களால், பாதிப்புக்கு உள்ளாவது பெரும்பாலும் பெண் குழந்தைகளே! இன்னும் சில இடங்களில் பெண் குழந்தைகளை பிறந்தவுடனே யே கொன்று விடுகின்றனர். ஏனெனில் அவர்களின் அடிப்படைத் தேவைகளாகிய உணவு, உடை, கொடுத்து வாலிபப் பருவம் அடையும் பொழுது ஒழுங்காகத் திருமணம் செய்து கொடுக்க இயலாது என எண்ணுகின்றனர். சில மதங்களில் பெண்களுக்கு ஒரு உரிமையுமே கிடையாது என்று போதிக்கின்றனர். அதாவது ஒரு கணவன் தன் மனைவியை எந்தவொரு காரணமும் இல்லா மலேயே தான் அவளை விவாகரத்து செய்கிறேன் என்று கூற முடியும். பெண்களின் ஆன்மா முக்தி அடைய முடியாது என்று வேறொரு மதம் கூறுகிறது.

ஆனால், மனுக்குலத்தில் பெண் என்பவள் இவ்வளவு தகுதி யற்றவளாகவா உள்ளாள்? அவரோடு பிரயாணம் சென்ற விசுவாசிகளில் பெண்களும் பங்கு வகிக்கும்படியான சிலாக்கி யத்தைப் பெற்றனர். (லூக். 8:1-3) தான் மரணத்தை வென்று உயிரோடெழுந்தபொழுது, முதன் முதலாக ஒரு பெண்ணுக்குத் தான் தரிசனமானார். அதுமாத்திரமல்ல தான் உயிரோடியிருக்கிற தான செய்தியை சீஷர்களுக்குச் சொல்லும்படியான வாய்ப்பை யும் ஒரு பெண்ணுக்குத் தான் கொடுத்தார். (யோவான் 20:11-18). தன்னிடத்தில் வருகிறவர்கள் யாராக இருந்தாலும் அவர் களுக்கு இரட்சிப்பு என்றுதான் வாக்குக் கொடுத்தாரே தவிர ஆண், பெண் என்று பாகுபடுத்தவில்லை (மத்தேயு 20:11-18).

வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்றார் (மத். 11:28).

தங்கள் செல்வாக்கு குறைவானதென்றும், தேவன் மீது தங்களுக்கிருக்கும் அன்பு, பக்தி இவைகளெல்லாம் ஒரு பொருட்டே அல்ல என்றும் பெண்கள் அடிக்கடி நிறைக்கின்றனர். பொதுவாக, பெண்கள் ஆராதனையை வழி நடத்துவதில்லை.

அப்படியானால் தங்களுக்கிருக்கும் பக்தியை வெளிக்காட்ட அவர்கள் என்ன செய்ய முடியும்? எப்படி, அவளுடைய வாழ்க்கையை வேறுபடுத்திக் காட்ட முடியும்?.

எனக்கு ஒரு கிறிஸ்தவப் பெண்ணைத் தெரியும். அவர்கள் கல்லூரிக்குச் சென்றதில்லை. அவர்கள் ஒரு எழுத்தாளரும் அல்ல. சில சந்தர்ப்பங்களில், சில பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் போதித்திருக்கிறார்கள். ஊழியத்தினிமித்தம் எந்தவொரு பிரயாணமும் மேற்கொண்டதில்லை.

அப்படியானால் என்னதான் செய்தார்கள்? கிட்டத்தட்ட 60 ஆண்டு கால குடும்ப வாழ்வில், தேவனுக்கு உகந்த பிள்ளையாக ஜீவித்தார்கள். அவளுடைய ஆவிக்குரிய பெலன், அவளுடைய கணவனின் ஆவிக்குரிய பெலனாக இருந்தது. தன்னுடைய விசுவாசத்தின் மூலம குழந்தைகளுக்கு, குடும்பத்தை, வீட்டை ஒரு குட்டிப் பரலோகம் போல மாற்றினாள். அவளுடைய தனிப்பட்ட முயற்சியின் பலனாக அநேகப் பெண்கள் சுவிசேஷத்தை அறிந்து கொள்ளவும், கிறிஸ்தவர்களாக மாறவும் முடிந்தது. அவள் தன்னுடைய விசுவாசத்தை தன் பிள்ளைகளுக்கு மாத்திரமல்ல, பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் ஊட்டி செயல்பாடுள்ள கிறிஸ்தவர்களாக வளர்த்தாள்.

அவளுடைய பிள்ளைகளுக்குக்குள்ளாக ஒரு ஊழியக் குடும்பம் எழும்பிற்று. அக்குடும்பம் அந்நிய மண்ணில் 30 ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றி கர்த்தருடைய சபையைக் கட்டியது. அவர்கள் அந்நாட்டில் வானொலியின் மூலமும், சத்தியத்தைப் பரப்பினார்கள். அமெரிக்கச் சகோதரர்களின் உதவியாலும், வெளி நாட்டிலுள்ள, வானொலிப் பிரசங்கியர் மற்றும் பத்திரிக்கை ஆசிரியர் உதவியாலும், பல கர்த்தருடைய சபைகள் உருவாகவும், அநேகர் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவும் அக்குடும்பம் உதவினர். அவர்களுடைய கூட்டு முயற்சியால் சத்தியம் என்றும் விதையானது அந்நாட்டின் பெரும்பாலான இடங்களில் விதைக்கப்பட்டது.

ஆகவே, கிறிஸ்தவப் பெண்களே! உங்கள் தேவ பக்தியிலே உறுதியாயிருங்கள். களி மண்ணைப் போல, மென்மைத் தன்மையுடைய குழந்தைகள் உங்கள் கரங்களில் கொடுக்கப்பட்டுள்ளார்கள். அக்குழந்தைகளை எப்படி வனையப் போகிறீர்கள்? அவர்களுடைய செல்வாக்கு எந்த வகையில் பரவுவதற்கு உதவி செய்யப்போகிறீர்கள்? இந்தக் கேள்விக்கான பதில் உங்களுடைய விசுவாச உறுதியை அடிப்படையாக வைத்துத்தான் உள்ளது. வேத வாக்கியங்களை முறையாகப் படிப்பதன் மூலமும், தேவனுக்கு நம்முடைய வாழ்க்கையில் முக்கியமான இடத்தைக் கொடுப்பதின் மூலமும், நம்மால் நேசிக்கப்படுபவர்களின் இருதயங்களில் சத்தியத்தையும், விசுவாசத்தையும் வேரூன்றச் செய்ய முடியும். இதைவிடச் சிறந்ததொரு வாழ்க்கை இல்லை. இல்லவே இல்லை.

**B.B. CHOATE** **R.R. NAYAGAM**

# ஈசாக்கின் இருதயம்

கிறிஸ்துவுக்குள் பிரியமான வாலிப நெஞ்சங்களுக்கு நல்ல வராம் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள் பல. இப்பவும் "தியான" நூலாம் திருமறை ஆசான் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்!

முற்பிதாக்களின் வரிசையில் வருகின்ற இரண்டாம் நபர் ஈசாக்கு இந்தக் கட்டுரையை அலங்கரிக்க வருகிறார். பொதுவாக, இருதயம் தான் மனிதனின் தரத்தையும் அவன் தன்மையையும் அவன் யாரென்பதையும் நமக்குக் காண்பிக்கிறது. மனந்திரும்பாத இருதயம் பொல்லாத இருதயமென்றும் (ஆதி. 6:5). மனந்திரும்பு கின்ற இருதயம் தேவனுக்கேற்ற இருதயமென்றும் சொல்லப்படு கிறது (அப். 13:22). ஈசாக்கை விரும்பாத கிறிஸ்தவர்களே இருக்க முடியாது. அந்தளவிற்கு நம்முடைய இருதயத்தில் நின்றிருப்பதற்கு அவனுடைய தரத்தையும் தன்மையையும் உயர்த்தின அவனுடைய இருதயமே காரணம். ஆகவே, ஈசாக்கின் உத்தம இருதயத்தைக் கவனிப்போம்.

## I ஈசாக்கும், கீழ்ப்படிதலும் :-

ஆபிரகாமின் தவப்புதல்வன் நேசகுமாரன், ஏககுதன் என்று தேவனுடைய குமாரனைப் பற்றி சொல்லப்பட்டது போலவே வர்ணிக்கப்படுகிறான். ஆபிரகாமிடத்திலே தேவன் உன் மகனை எனக்காக பலி செலுத்து என்றதும் தன் மகனை அழைத்துச் சென்றான் ஆபிரகாம் தேவக் கட்டளையை நிறைவேற்றுவதற்கு ஈசாக்கு எல்லா விதத்திலும் தன்னை ஒப்புக்கொடுத்தான். அடிக்கப்படும்படி கொண்டுப்போகப்படுகிற ஆட்டுக்குட்டியைப் போலவே ஒன்றும் அறியாதவனாக தகப்பனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிய வேண்டு மென்ற ஒரே எண்ணத்தில் தகப்பனுக்குப் பின் சென்றதை நாம் காண்கி றோம். தனக்கு நேரிடப்போவது இன்னதென்று அறியாதவனாக தகப்பனைப் பின்பற்றிச் சென்றான்! பிரியமான வாலிப சகோதரனே தன்னைப் பற்றி சிறிதும் கவலைப்படாமல் தேவனுக்கும், தன் தகப்ப னுக்கும் கீழ்ப்படிய வேண்டுமென்ற ஒரே நோக்கத்தில் பயணத்தைத் தொடர்ந்தான். ஆம், பிரிய மானவர்களே! ஆபிரகாம் விசுவாசத்தின் தந்தை என்ற பெயர் பெற ஈசாக்கின் கீழ்ப்படிதலுள்ள இருதயமே காரணம். வாலிப சகோதரனே ஒவ்வொரு காரியத்திலும் பயந்து கொண்டு, நமக்கு ஏதாவது கேடு வந்து விடுமோ என்ற சிந்தனையும் சுயத்தைக் கொல்லாத நினைவுகளும் நம்மிடத்தில் இருக்கும்போது தேவனுக்கு நாம் கீழ்ப்படிய முடியாது. சுயத்தை மறந்த நிலையில் ஈசாக்கு இருந்தான். அப்போஸ்தலர்களும் தேவனுக்குக் கீழ்ப்படிதலே அவசியமாயிருக்கிறது என்று தங்களது சுயத்தைக் கொன்று விட்டு தேவனுக்காய் செயல்பட்டனர் (அப். 5:28,29).

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் சுயத்தை மறந்து தேவனிடத்தில் தம்மை முழுமையாக ஒப்புக்கொடுத்து பட்டப் பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார். ஈசாக்கினுடைய கீழ்ப்படிதலினாலே தனது தகப்பனுக்கும், தனக்கும் தேவனிடத்திலிருந்து மிகப்பெரிய ஆசீர்வாதம் வந்தது. அதே போல இயேசு கிறிஸ்துவின் கீழ்ப்படிதலினாலே தேவனுக்கு மகிமையும் இயேசு கிறிஸ்துவுக்கு எல்லா நாமத்துக்கும் மேலான நாமமும் கிடைத்தது (எபிரெ. 5:7-9; பிலி 2:6-11). ஆகவே தேவனுக்குக் கீழ்ப்படிதலே உத்தமமாயிருக்கிறது.

## II ஈசாக்கும், தேவச்சித்தமும் :-

ஈசாக்கின் பிறப்பு அது வாக்குத்தத்தத்தைச் சார்ந்திருந்தது. ஈசாக்கின் வாழ்க்கை எல்லாக்கட்டத்திலும் அது தேவச்சித்தத்தைச் சார்ந்திருந்தது. தன் தகப்பனாகிய ஆபிரகாம் தன்னைப் பலி செலுத்த அழைத்துச் செல்லும் போது ஈசாக்கு கேட்கிறான். கட்டையும் நெருப்புமிருக்கிறது. தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே என்றான். அதற்கு ஆபிரகாம் அதை தேவன் பார்த்துக் கொள்ளுவார் என்றான் (ஆதி. 32:7,8) ஆகவே, சிறு பிராயம் முதல் தேவச்சித்தம் என்னவோ அதற்கு இசைந்தும், ஒப்புக் கொடுத்தும் வாழக்கற்றுக் கொண்டான். அது நன்மையானதாக வே முடிந்தது என்பதையே நாம் கவனிக்க வேண்டும்.

பிரியமான சகோதர, சகோதரிகளே ஈசாக்கு தனது வாலிப பிராயத்திலிருந்து தேவப்பக்திக்குரிய தியானம் என்ற நல்ல பழக்கம் இருதயத்திலிருந்து வந்தது. எல்லா காரியத்திலும் தேவனுடைய சித்தத்தையே சார்ந்திருந்த ஈசாக்கு தன்னுடைய திருமணத்திற்கும் தேவச் சித்தத்தையே சார்ந்திருந்தான் பார்வைக்கு இன்பமென்றும் இருதயத்திற்கு சுகமென்றும் நினைத்து மாம்ச உணர்வுகளுக்கு இடம் கொடுத்து அடிமையாகவில்லை, பல தாரமணங்கள் அனுமதிக்கப்பட்டிருந்த காலத்திலேயே அது தேவனுடைய சித்தத்திற்கு ஏற்புடையதாக இருக்காது என்று அறிந்து ஒரே மனைவியுடைய புருஷனாக திகழ்ந்தான் ஈசாக்கின் பய பக்திக்கு இதுவும் நல்ல சான்று. மாம்ச சிந்தனை, மனக்கணக்கு எல்லாவற்றையும் விட்டுவிட்டு தேவச்சித்தத்திற்குக் காத்திருந்தான். பிரியமானவர்களே ஈசாக்கின் இருதயத்தோடு நம்மை ஒப்பிட்டுப் பார்க்கும்போது நம்முடைய இருதயம் எப்படிப்பட்டதாக இருக்கிறது மாம்ச உணர்வுக்கு அடிமைப்பட்டு அதில் சுகம் கண்டு அதற்காக தேவச்சித்தத்தை மீறுகிறவர்களாக இருக்கிறோமா என்று சிந்தித்துப் பாருங்கள். (ஆதி. 24:63) தேவனுக்கு முன்பாக நம்முடைய இருதயம் செம்மையானதாக இருக்கிறதா சிந்தித்துப் பாருங்கள்.

திருமணத்திற்குப் பின் ஈசாக்கு மழலை செல்வத்திற்காக 20 ஆண்டுகள் வரை காத்திருந்தான் (ஆதி. 25:20,26). கர்த்தரிடத்திலே ஜெபிக்கிறான் கர்த்தர் அவனுக்கு இரண்டு குழந்தைகளை அருளினார். அந்த 20 ஆண்டு காலத்திலே எத்தனை அவமானத்தையும் வேதனையையும் சந்தித்திருப்பார். ஆனாலும் கர்த்தருடைய சித்தத்திற்காகக் காத்திருந்தான் வாக்குத்தத்தங்களே அவனைப் பெலப்படுத்தினது. கர்த்தர் ஈசாக்கை கைவிடவில்லை மாத்திரமல்ல. ஈசாக்கினிடத்தில்

உன் சந்ததி விளங்கும் என்று இயேசு கிறிஸ்துவைப் பற்றிய ஒரு பெரிய வாக்குத்தத்தத்தைப் பெற்றுக் கொண்டான்.

இப்படி தன் வாழ்வின் எல்லாக் காலக்கட்டங்களிலும் கர்த்தருக்குப் பயந்து கீழ்ப்படிந்து தேவச் சித்தத்துக்காக காத்திருந்து வாழ்ந்தான் ஈசாக்கு. எனவே தன் பின் நாட்களில் தேவனைப் பற்றிச் சொல்லுகின்ற போது ஈசாக்கின் பயபக்திக்குரியவர் என்று யாக்கோபினால் சொல்லப்பட்டது. (ஆதி. 31:42). ஆகவே, முற்றும் முடிய நம்மை இரட்சிக்க வல்லமையுள்ள தேவனுக்கும் அவருடைய சித்தத்திற்கும் நம்மை ஒப்புக்கொடுப்போம்.

## III இந்த இருதயத்துக்கு மனநோவா!

பிரியமானவர்களே! ஈசாக்கு எவ்வளவு சிறப்பான தேவ பக்தியான வாழ்வு வாழ்ந்தான் என்றும் ஈசாக்கின் இருதயம் தேவனுக்கு முன்பாக எவ்வளவு செம்மையானதாகவும் இருந்ததென்றும் கண்டோம். இந்த இருதயத்துக்குள்ளும் வேதனை இருந்தது. இந்த இருதயத்துக்குள்ளும் மனநோவிருந்தது என்றால் நம்ப முடியவில்லை! அதனால் மனிதன் தேவ பக்தியாய் ஜீவிப்பதினால் அவனுக்கு லாபம் என்ன என்று யோசிக்கத் தோன்றுகிறது. II தீமோ 3:12. ஆனால், பிரியமான வாலிபர்களே ஈசாக்கின் இந்த துக்கத்திற்கும் மனநோவிற்கும் அவன் இருதயமும் அவன் செயல்பாடுகளும், ஏசாவின் மனைவிகளின் செயல்பாடுகளுமே காரணமல்ல அவனுடைய மூத்த மகன் ஏசாவின் செயல்பாடுகளும் காரணம் (ஆதி. 26:34,35) பிரியமான வாலிப சகோதர சகோதரிகளே இன்றைக்கு நாம் யாருடைய மனதை புண்படுத்தி அந்த இருதயத்துக்கு நோகவா இருக்கிறோம் என்று நாமறிவோம் அப்படிப்பட்ட சூழ்நிலையில் இருப்பீர்களானால் தயவு செய்து மனந்திரும்புங்கள் பிறர் மனதை புண்படுத்தி நோகடித்து மகிழ்வதை விட்டு விடுங்கள். அதிலே தேவன் பிரியப்படமாட்டார் என்று அறியுங்கள். தேவனுக்கு ஏற்றபடி சிந்தியுங்கள்.

## முடிவுரை :

ஆகவே, பிரியமானவர்களே! எக்காலத்திலும் தேவன் விரும்புகிறபடியே செயல்படுவோம். மாறாக, தேவனுக்குக் கீழ்ப்படியாமல் துணிகரம் கொண்டு செயல்படுதல், தேவசித்தத்திற்கு காத்திராமல் அவசரப்படுதல் அல்லது மீறிச் செய்தல் எத்தனையோ பிரச்சனைகளையும் வேதனைகளையும் கொண்டு வருவமே ஒழிய சமாதானத்தையல்ல தேவனுக்குக் கீழ்ப்படியாமல் எதிர்த்து நிற்கிற வாலிபர்களே இதைக் கவனியுங்கள் தேவச் சித்தத்தை நிறைவேற்றாமல் விலகி நிற்கிற வாலிபர்களே இதைக் கேளுங்கள் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் முரட்டாட்டம் செய்வீர்களானால் உங்களைத் தொடப்போவது சமாதானமல்ல. சஞ்சலம் தான் உங்களைத் தொடரப்போவது பரமனின் ஆசீர்வாதமல்ல பட்டயமே என்பதைப் புரிந்து கொண்டு, பாவத்தையும், துரோகத்தையும் விட்டு விட்டு கர்த்தருக்காக எழுந்து வா, கர்த்தருக்காகக் காத்திரு, அவர் உன்னை உயர்த்துவார். அவரே உன்னை ஆசீர்வதிப்பார். ஆமென்!

**K. சேகர்,** திருப்பூர்.

# காட்டுப் பூக்களிடமிருந்து



சிறுவர் பகுதி

அன்பான சிறுபிள்ளைகளே, பூக்கள் என்றால் நம் எல்லாருக்கும் ரொம்பப் பிரியம் தானே! நாம் எல்லோரும் அழகான மலர்களைப் பார்த்தால் கையிலே எடுத்துக் கொள்வோம். பெண் பிள்ளைகள் மலர்களைத் தலையிலும் சூடி மகிழ்வார்கள்.

இந்தப் பூக்கள் பற்றி, இயேசு தன்னுடைய புகழ்பெற்ற மலைப் பிரசங்கத்தில் ஒருமுறை குறிப்பிட்டிருக்கிறார். இயேசு இப்பூமியில் வாழ்ந்த நாட்களில் திறந்த வெளியில் நிறைய பிரசங்கங்களைச் செய்துள்ளார். ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குப் போகும் போது தனது சீடர்களிடம் பேசியுள்ளார். சில வேளைகளில் போகும் வழியில் ஓரிடத்தில் நின்று விடுவார். அங்கே சீடர்களும் கூடி விடுவார்கள். அப்படித் திறந்த வெளியில் நின்று பிரசங்கிக்கும் போது, கண்ணுக்குத் தெரிகின்ற, அருகாமையிலுள்ளவைகளைக் காட்டிப் பிரசங்கிப்பார்.



புகழ் மிக்க மலைப்பிரசங்கம் (மத்தேயு 5-7 அதிகாரங்கள்) கூட இப்படி ஒரு சந்தர்ப்பத்தில் தான் நடந்தது. அவர்களைச் சுற்றிலும் கம்பளம் போல் படர்ந்திருந்த காட்டுப் புஷ்பங்களை கவனித்துப் பாருங்கள் என்றார். “உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுகிறதென்ன? காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப் பாருங்கள். அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை. என்றாலும், சாலொமோன் முடிவாய் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப் போலாகிலும் உடுத்தியிருந்ததில் உங்களுக்குச் சொல்லுகிறேன்” (மத் 6:28,29).

இப்பொழுது நீங்கள் அப்படியே கற்பனை செய்து பாருங்கள். இந்த மாபெரும் போதகர் காட்டுப் புஷ்பங் களை கவனித்துப் பாருங்கள் என்கிறார். ஆம், அவைகள் எவ்வளவு அழகாக இருக்கிற தென்று பாருங்கள். மனிதர்களின் எந்த உதவியும் இல்லாமல், அவைகள் காடுகளில் வளருகின்றன. ஆனாலும், அவைகள் கவலைப்படுவதில்லை. அவைகள் வளரும்படி தேவன் அவை களுக்கு மழையையும், சூரிய ஒளியையும் தருகிறார். இவைக ளுக்குத் தேவையானவைகளை தேவன் கொடுக்கும் போது, சிறுபிள்ளைகளாகிய நாம் ஏன் நம்முடைய தேவைகளுக்காகக் கவலைப்பட வேண்டும்? தேவன் மனிதர்கள் எல்லோரையும் குறித்து, குறிப்பாக, சிறு பிள்ளைகளாகிய நம்மைக் குறித்து அவர் அக்கறையுள்ளவராகவே இருக்கிறார். ஆகவே தான், இயேசு, சிறுபிள்ளைகள் என்னிடத்திற்கு வரத்தடை பண்ணாதிருங்கள் என்றார்.

காட்டு மலர்களைக் காட்டிலும், வீட்டு மலர்களாகிய நாம் விசேஷமானவர்கள். ஆகவே நாம் ஒரு போதும் கவலைப்படக் கூடாது. நாம் செய்ய வேண்டிய காரியம் ஒன்றே ஒன்றுதான். "முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தையும் அவருடைய நீதி யையும் தேட வேண்டும். அப்பொழுது, இவைகளெல்லாம் நமக்குக் கூடக் கொடுக்கப்படும்". (மத். 6:33).

**R. ஏபில் ரோஜர் நாயகம்**

## நாளும், நடப்பும்

1. போபால் விஷவாயு வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பு நீதிமன்றத்தின் மரியாதையை கேள்விக் குறியாக்கியிருக்கிறது.
2. மேற்கு வங்க மாநிலத்தில் கம்யூனிஸ்ட்டுகளின் ஆதிக்கம் ஆட்டம் காண ஆரம்பித்திருக்கிறது.
3. தமிழ் செம்மொழி மாநாட்டுக்கான ஏற்பாடுகள் ஏக தடபுடலாக நடந்தேறி வருகிறது.
4. இலங்கைத் தமிழர் பிரச்சனையில் ராஜபட்ஷாவின் வாக்குறுதியை இந்திய அரசாங்கம் இன்னமும் நம்புகிறது.
5. எம்.பி.பி.எஸ் படிப்பில் சேர மாணவர்களைக் காட்டிலும் மாணவிகள் அதிகம் பேர் விண்ணப்பித்துள்ளனர்.
6. பெட்ரோல், டீசல், கேஸ் விலை உயர்வு இந்திய அரசால் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது.
7. ஒரு மாதம் நடைபெறும் உலக கோப்பை கால்பந்து திருவிழா தென் ஆப்பிரிக்காவிலுள்ள ஜோகன்ஸ் பார்க் நகரில் கோலாகலமாக துவங்கியுள்ளது.

# கிறிஸ்துவின் மணவாட்டி

நாம் சபை பற்றி நன்றாகப் புரிந்து கொள்ளும்படி, வேதாகமத்தில் சபையை விவரிப்பதற்காக அநேக உருவகங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அந்த உருவகங்கள் சில ராஜ்யம், சரீரம், ஆலயம், மந்தை, குடும்பம் போன்றவைகளாகும். IIகொரிந்தியர் 11:2ல் பவுல் சபையை ஒரு மணவாட்டியாக ஒப்பிடுகிறார். அவர் இப்படியாக எழுதுகிறார். " நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாக கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக் கொடுக்க நியமித்தபடியால் உங்களுக்காகத் தேவ வைராக்கியமான வைராக்கியங் கொண்டிருக்கிறேன் ". இந்த உருவகமானது தனித்துவம் வாய்ந்த அடையாளம், நெருக்கமான உறவு, அளவற்ற பராமரிப்பு அப்பழுக்கற்ற அழகு போன்ற பல்வேறு நிலைகளை உட்பொருளாக கொண்டுள்ளது. ஆயினும், கேள்வி கேட்கப்படமுடியாத உண்மைத்தன்மை என்கிற மற்றொரு நிலையின் மீது நான் கவனம் செலுத்த விரும்புகிறேன்.

மணவாட்டி என்பது உண்மைத்தன்மை, நம்பிக்கை என்பனவற்றை தெரிவிக்கிறது. திருமணம் என்பது ஒரு ஒப்புக் கொடுத்தல், அன்பு, உண்மைதன்மை போன்றவைகள் அவசியப்படுகின்ற ஓர் உடன்படிக்கையாகும். திருமணத்தில் ஒவ்வொருவரும் மற்றவர்களுடைய நலனை எதிர் நோக்குகிறவர்களாக காணப்பட வேண்டும். கிறிஸ்து இதை சபைக்கு செய்திருக்கிறார் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். எப்படி ஒரு நல்ல கணவன் தன் மனைவிக்கு செய்வானோ அது போல கிறிஸ்து சபைக்காக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார் (எபேசியர் 5:23). திருமணம் என்கிற விஷயத்தில் கணவனும், மனைவியும் அவரவர் ஜீவனை விட ஒருவருக்கொருவர் அபரிதமான அன்பு செலுத்த வேண்டும். பிரிந்திருப்பதைக்காட்டிலும் மரணத்தை எதிர்கொள்வதைத் தெரிந்து கொண்ட கணவன், மனைவி உறவுகளைப் பற்றி நாம் கேட்டிருக்கிறோம். கணவனும், மனைவியும் ஒருவருக்கொருவர் இருதயத்தில் கொண்ட அபரிதமான அன்பு தங்கள் ஜீவனை விட இவர்களுக்கு பெரிதாக காணப்பட்டிருக்கிறது.

கிறிஸ்துவினிடத்தில் நம்முடை உண்மைத்தன்மை எல்லாவற்றை விட விலையேறப் பெற்றதாய் இருக்க வேண்டும். யோசேப்பு தனக்கு நியமிக்கப்பட்டிருந்த மரியாள் கர்ப்பமான காரணத்தால் அவளை தள்ளிவிட தீர்மானத்தாள். சந்தேகமின்றி யோசேப்பு மரியாளை நேசித்தான். ஆனால், யோசேப்பின் பார்வையில் மரியாள் உண்மையில்லாத பெண்ணாக காணப் பட்டபடியால் அவளை திருமணம் செய்ய மறுத்தான். ஒரு

மனைவி தன் கணவனுக்கு துரோகம் செய்வது நினைத்து பார்க்க முடியாத ஒன்று. எனவே, தான் பவுல் கிறிஸ்தவர்களுக்கு கிறிஸ்துவினிடத்தில் இருக்க வேண்டிய உண்மைத் தன்மையை விவரிக்கும்படி இந்த உதாரணத்தைக் கொடுக்கிறார்.

இதேக் கருத்தை வலியுறுத்துவதற்காக யாக்கோபு சொல்லும் போது, விபசாரரே, விபச்சாரிகளே என்று சொல்கிறார் (யாக்கோபு 4:4). தொடர்ந்து யாக்கோபு உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை என்று வலியுறுத்துகிறார். இந்த உலகத்தின் காரியங்கள் நமக்கு கிறிஸ்துவை விட முக்கியமாக மாறுமானால் அது சரீரப்பிரகாரமாக விபச்சாரம் செய்வது போன்றதாகும். இந்த கட்டளையான வார்த்தைகளை லூக்கா 14:33ல் இயேசு சொல்லியிருக்கிறார். "அப்படியே உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டானவைகளை எல்லாம் வெறுத்துவிட விட்டால் அவன் எனக்கு சீஷனாயிருக்கிமாட்டான்".

கிறிஸ்துவினிடத்தில் நம்முடைய அபரிதமான அன்பு நம் உறவுகளிடத்தில் நாம் காட்டும் அன்பை விட மேலானதாக இருக்க வேண்டும். திருமணத்தில் கணவன், மனைவி இடையே இருக்கக் கூடிய உறவு, மற்ற உறவுகளை விட நெருக்கமானதாக இருக்க வேண்டும். இதில் குறைவு ஏற்படுமானால் அது பிரச்சனைகளை உண்டாக்கும். இது ஆவிக்குரிய பிரகாரமாகவும் உண்மையாகிறது. நாம் நம்முடைய குடும்பத்தினர்களோடு கொள்ளும் உறவை விட கிறிஸ்துவினிடத்தில் நாம் கொண்டிருக்கும் உறவு நெருக்கமானதாக இருக்க வேண்டும். லூக்கா 14:26ல் கிறிஸ்து இப்படியாகச் சொன்னார். "யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும், தாயையும், மனைவியையும், பிள்ளைகளையும் சகோதரரையும், சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்க மாட்டார்". இவைகள் கடுமையான வார்த்தைகளாகக் காட்சியளிக்கலாம், ஆனால், இந்த உலகத்தில் நாம் கொண்டிருக்கும் உறவுகளை விட நாம் கிறிஸ்துவோடு கொண்டிருக்கும் அன்பு நெருக்கமானதாக, முக்கியமானதாக இருக்க வேண்டும் என்பதையே அவைகள் வலியுறுத்துகின்றன.

மேற்சொல்லப்பட்ட கருத்துக்களை இன்றைய நாளின் சபையோடு நாம் ஒப்பிட்டுப் பார்த்தால் அநேக குறைகளை நம்மால் கண்டுபிடிக்க முடியும். அநேகருக்கு கேளிக்கை மையங்களை விட சபை முக்கியமானதாக இல்லை. அவர்கள் சபையை ஒரு நல்ல அமைப்பாக காண்கிறார்கள். நம்மிடமிருந்து தியாகத்தை எதிர்பார்க்கின்ற ஒரு அமைப்பாக அவர்கள் காண்பதில்லை. சிலர் ஒரு சபையிலிருந்து மற்றொரு சபைக்கு, ஒரு கூட்டத்திலிருந்து இன்னொரு கூட்டத்திற்கு தாவுகிறார்கள். எந்த அமைப்பு தற்காலத்திற்கு தங்கள் இச்சைகளை பூர்த்தி செய்கிறதோ அதில் தங்களை இணைத்துக்கொள்கிறார்கள். அநேகருடைய மனதில் குடும்ப அங்கத்தினர்களின் நம்பிக்கைகள் வேதாகம போதனையை விட முக்கியமானதாக காணப்படுகிறது. சத்தியத்தோடு அவர்களை எதிர்கொண்டால் கூட தங்கள் குடும்ப பாரம்

பரியத்திற்கு எதிராக செயல்பட அவர்கள் மறுக்கிறார்கள். இன்னும் அநேகர் தேவனுக்காக வேலை செய்வதற்கு பதிலாக, இந்த உலகத்தின் ஐசுவரியத்தை சேர்ப்பதற்காக அதிக நேரம் வேலை செய்கிறார்கள். அவர்கள் ஆவிக்குரிய காரியங்களில் தாங்கள் ஈடுபடுவதற்கு நேரமில்லை என்று சாக்கு போக்குச் சொல்கிறார்கள். உண்மையில் அவர்களுக்கு எது முக்கியம் என்பதையேக் காட்டுகிறது.

உங்கள் வாழ்க்கையில் தேவன் எவ்வளவு முக்கிய மானவர்? சிலர் தங்களுக்கு தேவன் மிகவும் முக்கியமானவர் என்று அறிவிப்பார்கள், ஆனால், அவர்கள் முன்பே விவரிக்கப் பட்டது போல சில காரியங்களைத் தான் செய்வார்கள். ஒரு மண வாட்டி இத்தகைய மனப்பான்மைகளை வெளிப்படுத்துகிறதா யிருந்தால், தன்னுடைய புருஷனால் ஏற்றுக்கொள்ளப்படமாட் டாள், இத்தகைய மனப்பான்மைகளை நம்முடைய ஆவிக்குரிய மணவாளனும் ஏற்றுக்கொள்ளமாட்டார். தேவன் உண்மை யிலேயே அன்பான தேவன் தான். ஆனால், நம் தேவன் தமக்கு போட்டியாக இருக்கின்ற யாதொன்றையும் சகித்துக்கொள்வ தில்லை. அதனால்தான் அடிக்கடி இப்படிச் சொல்லப்படுகிறது, தேவன் உங்கள் வாழ்க்கையில் முதலிடத்தில் இருப்பார் அல்லது உங்கள் வாழ்க்கையில் இல்லாமல் இருப்பார். நாம் எப்போதும் நம்முடைய மனதில் மணவாளனுக்காக அலங்கரிக்கப்பட்ட மண வாட்டியின் உருவகத்தை வைத்துக்கொள்ள வேண்டும். ஒருவர் ஒருமுறை இப்படிச் சொன்னார் "நாம் கிறிஸ்துவின் மணவாட்டி யை போல நடிக்க வேண்டாம், ஆனால், கிறிஸ்துவின் மண வாட்டியாக உண்மையாகவே நாம் இருப்போம்".

"உன் தேவனாகிய கர்த்தர் பட்சிக்கிற அக்கினி, அவர் எரிச்சலுள்ள தேவன்" (உபாகமம் 4:24).

**Benny Martin** **Jerry Bates**

## கிறிஸ்துவும், மணவாட்டியும்

புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து,

தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து பரிசுத்தமாக்குகிறதற்கும்,

கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத் தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார் (எபே 5:25-27).

# “ துருவின் சாட்சி ” நூலில் இருந்து

## பாடம் - 3 (சென்ற மாதத் தொடர்ச்சி)

# கொடுத்தல் ஒரு வேதாகம பாடம்

**II புதிய ஏற்பாடு பணத்தைப் பற்றி அநேக காரியங்களைச் சொல்கிறது**

“பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து விசுவாசத்தை விட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக்குத்திக் கொண்டிருக்கிறார்கள் ” (Iதீமோத்தேயு 6:10).

பணம் வஞ்சனையுள்ளது. பணத்தை மனிதர்கள் பெற்றுக் கொள்ளும் போது, அவர்களைத் தன் வசப்படுத்தும் வல்லமை பணத்திற்கு இருக்கிறது. பணம் மனிதனுடைய ஆத்துமாவின் எஜமானாக மாற முடியும். அப்படி மாறிய பின்பும், மனிதனை, இன்னும் நான் தான் எஜமானாக இருக்கிறேன் என்று எண்ணவும் வைக்கும். அநேகருக்கு பழைய கிரேக்க கதை ஒன்று நினைவுக்கு வரும். கட்டுக்கடங்காத பண ஆசையுடன் இருந்த “மிடாஸ்” என்கிற ராஜா தன்னுடைய பண ஆசையின் நிமித்தமாக சபிக்கப்பட்டான். “டயானிசஸ்” என்கிற இந்த கடவுள் இந்த ராஜாவுக்கு தொட்டதையெல்லாம் பொன்னாக மாற்றும் சக்தியைக் கொடுத்தது. இந்த வரம் கிடைத்தவுடன், இந்த ராஜா தன்னுடைய உடைமைகளையெல்லாம் தொட்டான். அவைகளெல்லாம் பொன்னாக மாறின; தன்னுடைய நாற்காலி, படுக்கை, உடைகள் எல்லாம் தான் தொட்டவுடன் பொன்னாக மாறியதை பார்த்து மகிழ்ச்சி அடைந்தான். அதேநேரம் அவன் பசியாயிருந்த போது அவனுடைய உணவும் பொன்னாக மாறியது. அவனுடைய சிறு பெண் அவனை வாழ்த்த வந்தபோது அவளை அவன் தொட்டதினால் அவள் பொற்சிலையாக மாறினாள். இந்த புராணக்கதை பண ஆசையின் சாபத்தைத் தெளிவாக விளக்குகிறது.

பணம் சம்பாதிப்பதற்கான நம்முடைய திட்டத்தில் முதலில் சபை வரவேண்டும். கிறிஸ்துவுக்காகவும், சபைக்காகவும் நாம் ஏதாவது நன்மை செய்ய வேண்டுமென்பதற்காக நாம் செழிப்பாக இருக்க ஆசைப்பட வேண்டும். சபைக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்கிற பாடத்தை ஒரு பிரசங்கியார் போதிக்க கேட்ட ஒரு வாலிபன் பிரசங்கம் முடிந்தபிறகு, அப்பிரசங்கியாரிடம் பிரசங்கித்திற்காக நான் உங்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், என்னுடைய கொடுத்தலில் ராஜ்ஜியத்திற்கு முதலிடம் கொடுக்கவில்லை என்பதை ஒத்துக் கொள்கிறேன். எனக்கு சம்பளம் கிடைத்தவுடன் முதலில் நான் விரும்புகிற பொருள்களுக்காக செலவழிக்கிறேன். அதில் ஏதாவது மீதியிருந்தால், அதில் கொஞ்சத்தை தேவனுக்குக் கொடுக்கிறேன் என்று கூறினான். மேலும், அந்த வாலிபன் பிரசங்கியாரிடம் சொல்லும்போது, நான் பயங்கரமான பாவத்தை செய்து கொண்டிருக்கிறேன் என்பதை இன்று உணர்ந்து கொண்டேன். ஆனால், தேவன் எனக்கு சாட்சியாயிருக்கிறார், இனிமேல் என்னுடைய சம்பாத்தியத்தில் பத்து சதவீதத்திற்கு கீழே நான் தேவனுக்கு

காணிக்கையாக கொடுக்கமாட்டேன். அதுவும் சம்பாத்தியத்தில் முதல் பத்து சதவீதமாயிருக்கும், என்றான்.

சகோதரரே, நாம் இப்போதாகிலும் விழித்துக் கொண்டால் நலமாயிருக்கும், ஏனென்றால், அநேகருக்கு பணத்தை குறித்து தவறான மனப்பான்மை இருக்கிறது. ஒன்றை நினைவில் கொள்ளுங்கள். இந்த உலகத்தில் எந்த வயதுடைய மக்களாயிருந்தாலும் தங்களுடைய வருமானத்தில் பத்து சதவீதத்திற்கு குறைவாக தேவனுக்கு கொடுத்துக்கொண்டு, தேவனுடைய அங்கீகாரத்துக்கு ஏற்றவர்களாக இருக்கிறார்களென்று சொல்ல முடியாது.

## III புதிய ஏற்பாடு பொருளாசை குறித்து அதிகமாக போதிக்கிறது

"ஆகையால், விபச்சாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப் போடுங்கள். இவைகளின் பொருட்டே கீழ்ப்படியாமையின் பிள்ளைகள் மேல் தேவ கோபாக்கினை வரும்". (கொலோசெயர் 3:5-6).

டேவிட் லிப்ஸ்கோம்ப் (**David Lipscomb**) என்பவர் தன்னுடைய வகுப்புகளில் பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் கர்த்தருக்கு கொடுப்பதில் அவர் எப்படியாக மாம்சத்தை ஜெயித்தார் என்று சொல்லியிருக்கிறார். அவர் முதலில் கிறிஸ்தவ வாழ்க்கையைத் தொடங்கின போது கர்த்தருக்கு கொடுப்பதில் சில சிரமங்கள் இருப்பதாகச் சொன்னார். அவர் கர்த்தருக்கென்று காணிக்கை கொடுக்க தன் மனதில் ஒரு டாலரை நியமித்தபோது, பிசாசு அவரிடம் சகோதரன் ஸ்மித்தை பார், அவர் உன்னைவிட வசதியாக இருக்கிறார் அவர் கூட ஐம்பது சென்ட்கள் தான் காணிக்கையாக கொடுக்கிறார் என்று குறிப்பால் உணர்த்துவான். டேவிட் அவர்கள் இருபது டாலர் கொடுக்க தன்னுடைய மனதிலே நியமித்த போது, பிசாசின் அதே விதமான ஆலோசனைகள் வந்தன. அதாவது, உன்னை விட இந்த உலகத்தில் ஐசுவரியம் அதிகமாக உள்ளவர்கள் குறைவாகக் கொடுக்கிறார் கள் நீ ஏன் அதிகமாக காணிக்கை கொடுக்கிறாய்? என்று எண்ண வைப்பான். ஆனால், டேவிட் அவர்கள் அதிலிருந்து அதிகமாக கொடுக்கத் தொடங்கினார். மேலும், அவர் சொல்லும்போது பிசாசின் சோதனைகளால் தான் தளர்ந்து போய் விட்டதாகவும், இனிமேல் ஒவ்வொரு முறை பிசாசு தன்னைக் குறைவாக கொடுக்கத் தூண்டும் போதெல்லாம், தான் கொடுக்க மனதில் நியமித்த தொகையை இரண்டு மடங்காக உயர்த்திக் கொடுப்பதாக தீர்மானம் எடுத்துக் கொண்டார். அதாவது, அவர் இருபது டாலர்கள் கொடுக்க மனதில் நியமித்தபோது பிசாசு குறைவாக கொடுக்கத் தூண்டினால், அவர் நாற்பது டாலராகக் கொடுத்தார். பிசாசின் முயற்சிகள் எல்லாம் தோல்வி அடைந்தபடியால் அவன் டேவிட் லிப்ஸ்கோம்பை விட்டு ஓடிவிட்டான். நீங்கள் கொடுக்கும்போது இப்படியாகச் சோதிக்கப்பட்டால் இவர் போன்று முயற்சி செய்து பாருங்கள். யாக்கோபு ஆசிரியர் "பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள் அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான் " என்று இந்தப் பொருளில் தான் சொல்லியுள்ளார். (யாக்கோபு 4:7).

பொருளாசை வஞ்சனையுள்ளதாய் இருக்கிறபடியால் மிகவும் அபாயகரமானது. பொருளாசை என்பது ஒரு மனிதன் தான் வியாதிப்பட்டிருப்பதை அறிந்து கொள்வதற்கு முன்பே அவனுடைய சரீரத்தில் உள்ள ஒவ்வொரு அவசியமான, முக்கிய மான உறுப்புகளையும் அரித்துப் போடுகிற புற்று நோயைப் போன்றது. ஒரு குறிப்பிட்ட மத போதகர் தன்னிடம் 5000க்கும் அதிகமான பேர் பாவ அறிக்கை செய்துள்ளதாகச் சொன்னார் என்று நான் வாசித்திருக்கிறேன். ஆனால், ஒரு பாவம் மாத்திரம் அறிக்கை செய்யப்படவேயில்லை. இப்போது, அந்த மத போத கரிடம் அறிக்கை செய்யப்படாத பாவம் என்னவாயிருக்கும் என்று யூகித்துப் பாருங்கள். ஆம், நீங்கள் யூகிப்பது சரிதான், அது பொருளாசை என்கிற பாவம் தான். அநேக பொருளாசை பிடித்த சபை உறுப்பினர்கள் இந்த பயங்கரமான வியாதியாகிய ' பொருளாசை என்கிற பாவம் இயேசுவானவர் என்னை விட்டு அகன்று போங்கள் " என்று சொல்லுவதற்குக் காரணமாக அமைந்து விடும் என்பதை உணர்ந்து கொள்வதற்கு முன்பாகவே மரித்துப்போய் விடுவார்கள் என்று நான் எண்ணுகிறேன்.

## IV புதிய ஏற்பாடு நம்முடைய கொடுத்தலைப் பற்றிய தேவனுடைய அக்கறையை வலியுறுத்துகிறது

" நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் பரத்தி லிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்று மையின் நிழலுமில்லை " (யாக்கோபு 1:17)

தேவன் நமக்குத் தந்திருக்கிற நன்மையானவைகளாகிய மழை, சூரிய ஒளி, உணவு, உடை, அழகான சூரிய அஸ்தமனம் என்று இன்னும் லட்சக்கணக்கானவைகளுக்காக நாம் தேவனுக்கு நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். நாம் எப்படி கிறிஸ்தவ ஜீவியத்தை ஜீவிக்க வேண்டும் என்று நமக்கு சொல்லும் வேதாக மத்திற்கு நாம் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

தேவன் மிக ஆழமான விவரங்களை தம்முடைய குமார னைத் தந்தது பற்றி கூறுகிறார். புதிய ஏற்பாடு முழுவதிலும் கிறிஸ்து மனிதனிடத்தில் கொண்டிருக்கும் அன்பை நாம் வாசிக்கிறோம். " கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையிலறையப்பட்டேன். ஆயினும் பிழைத்திருக்கிறேன் இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக் கிறதோ, என்னில் அன்பு கூர்ந்து எனக்காக தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத் தினாலே பிழைத்திருக்கிறேன் " (கலாத்தியர் 2:20).

தேவன் நம்மீது கொண்டிருக்கும் அன்பினிமித்தமாக ஐசுவரியத்தின் ஆபத்துக்களைக் குறித்து புதிய ஏற்பாடு முழு வதும் எச்சரிக்கிறார். பணமானது மனிதனுடைய முடிவெடுக்கும் திறனை உருவிழக்கச் செய்கிறது.

சில வருடங்களுக்கு முன்பு மொபைல் பிரஸ் ரெஜிஸ்டர் என்கின்ற பத்திரிக்கையிலிருந்து ஒரு துணுக்குச் செய்தியை கத்தரித்தேன். அந்த செய்தியில் வில்லிஉட்ஸ் (**Williewoods**)

என்பவர், " தன்னுடைய ஜீவனை விட பணத்தை அதிகமாக நேசிப்பதாக பெருமை அடித்திருக்கிறார்". அவரை அறிந்தவர்கள் அவர் மருந்துக்குக் கூட பணத்தை செலவு செய்யமாட்டார் என்று சொன்னார்கள். அதன் பின்பு அவரை ஒரு விடுதியில் ஒரு ஹீட்டருக்கு முன்பாக செத்துக் கிடந்ததைக் கண்டிருக்கிறார்கள். அந்த இடத்தின் உரிமையாளர் இது பற்றி சொல்லும்போது வில்லி ஹீட்டர் அருகில் தூங்குவதற்கு கேட்டதாகவும் தூங்கிக் கொண்டிருக்கும்போதே மரித்து விட்டதாகவும் சொன்னார். வில்லியின் சட்டைப் பாக்கெட்டிலிருந்து 1600 டாலர் எடுத்திருக்கிறார்கள். பாக்கெட்டில் நிறைய பணத்தை வைத்துக் கொண்டு தேவையிலும், பசியிலும் ஒரு மனிதன் மரிப்பது எவ்வளவு துக்ககரமானது! " அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக் கடவன். உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்" (II கொரிந்தியர் 9:7). புதிய ஏற்பாடானது ஒரு மனிதன் உதாரத்துவமாய்க் கொடுக்கிறவனாய் மாறுவதற்கு தேவையான எல்லாத் தகவல்களையும் கொடுத்திருக்கிறது. நாம் எப்பொழுது கொடுக்க வேண்டுமென்று வேதாகமம் சொல்கிறது. " பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்ம பணத்தைக் குறித்து நான் கலாத்தியா நாட்டு சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள், நான் வந்திருக்கும் போது பணஞ் சேர்க்குதல் இல்லாதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள்தோறும் தன்தன் வரவுக்குத்தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக்கடவன் " (I கொரிந்தியர் 16:1-2).

மேலும், தேவன் யார் கொடுக்க வேண்டுமென்றும் சொல்கிறார். " ஒருவனுக்கு மனவிருப்பமிருந்தால் அவனுக்கு இல்லாதின்படியல்ல அவனுக்கு உள்ளதின்படியே அங்கீகரிக்கப்படும் " (II கொரிந்தியர் 8:12).

தேவன் நாம் எவ்வளவு அவருக்கு கொடுக்க வேண்டுமென்றும் சொல்கிறார். "....அவனவன் தன் வரவுக்குத்தக்கதாக கொடுக்க வேண்டுமாம்". சுவிசேஷம் ஒவ்வொருவருக்கும் பிரசங்கிக்கப்படவும், பசியுள்ளோருக்கு ஆகாரம் கொடுக்கப்படவும், நாம் ஒவ்வொரு நற்கிரியையும் செய்ய ஆயத்த மாகும்படிக்கும், நாம் கொடுக்கவேண்டும். எனவே, வேதாகமம் கொடுத்தலைப் பற்றிப்பேசும் ஒரு புத்தகம் என்று காண்கிறீர்கள்.

புதிய ஏற்பாட்டுக் கொடுத்தலை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டுவர முயற்சி எடுக்கத் தயாரா?.

தேவன் உனக்கு தந்திருந்த ஆசீர்வாதங்களுக்காக அவருக்கு நன்றி செலுத்து, நீ சேர்த்து வைத்திருக்கிற பொருள்களை மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொடு. உன்னுடைய முயற்சி எவ்வளவு பெரியதாக இருந்தாலும் அதைவிட பெரிதானவைகளை, அதிகமானவைகளை உன் இரட்சகர் உனக்குள் தந்திருக்கிறார் என்பதை எப்பொழுதும் நினைவில் கொள்.

# துன்பப்படும் கர்த்தருடைய தாசன்

மண்டலத்தாரை மீட்க விண்டலம் விட்டு வந்த விந்தை நாதர், நம்மை பரலோகம் சேர்க்க, பட்ட காயங்களை தியானம் செய்கையில் உள்ளமெல்லாம் பதைக்கிறது. ரத்த வெள்ளத்தில் மா நேசரைக் காண்கையில் அன்பு வெள்ளம் ஆறாக ஓடுகிறது, ஆணி பாய்ந்த மீட்பர் பாதம் காண்கையில், பாசத்தால் நெஞ்சம் பொங்கி, அவர் பாதம் தஞ்சம் என முத்தமிடத் தோன்றுகிறது அவர் சிலுவை அடியில் நிற்பதே மா பாக்கியம், வாருங்கள் அவரின் சிலுவையினால் கிடைத்த பலன்களைப் பற்றி தியானிப் போம்.

பாவப் பிணி தீர்க்கும் பணி கொண்டு இத்தரைக்கு வந்த இயேசு ஆண்டவரைக் குறித்து பல நூற்றாண்டுகளுக்கு முன்பே வாக்குரைத்த ஏசாயா பற்றியும், அவர் எழுதிய நூல் பற்றியும், அவர் எழுதிய தீர்க்கதரிசனங்களை புதிய ஏற்பாட்டு எழுத்தாளர் கள் எப்படி மேற்கோள் காட்டி எழுதினார்கள் என்பது பற்றியும், உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்க வந்த நமது ஆண்டவர் இயேசுவைக் குறித்து, ஏசாயா முன்னுரைத்த நான்கு பகுதியில், முதல் பகுதியை நாம் கவனித்து வருகிறோம். கடந்த இதழின் தொடர்ச்சி புறஜாதிகளுக்கு தமது நியாயமாகிய புதிய ஏற்பாட்டை எப்படி வெளிப்படுத்தினார் என்பதை காண்போம் வாருங்கள்.

### புறஜாதிகளுக்கும் புதுவழியை வெளிப்படுத்தினார்

இயேசு ஆண்டவர், தமது ஊழிய நாட்களில் இஸ்ரவேல் தேசத்தை விட்டு வெளியே செல்லவில்லை. ஆனாலும், தனது ஊழிய நாட்களில், அவர் புறஜாதிகளையும் சேர்த்துக்கொள்ளு வேன் என்று கூறினார். இதோ அவரது வார்த்தைகளை வாசித்துப் பாருங்கள், இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டுவர வேண்டும், அவைகள் என் சத்தத்துக்குச் செவி கொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும், ஒரே மேய்ப்பனுமாகும். என்றார் (யோவ. 10:16).

நமது ஆண்டவர் பிலிப்புச் செசரியாவின் திசைகளில் வந்து கொண்டிருக்கையில், தமது சீடர்களைப் பார்த்து, மக்கள் என்னை யார் என்று கூறுகின்றார்கள் என வினாவினார், அப்பொழுது, எப்பொழுதும் துடுக்காகப் பதில் தரும் பேதுரு, நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து (மத்தேயு 16:16) என பதிலு ரைத்தான். இவ்வார்த்தைகள் உன் சிந்தையிலிருந்து வந்தவைகள்

அல்ல; என் விண்ணகத் தந்தையே இதை உனக்கு விளம்பினார், இறை அரசின் சாவியை உனக்குத் தருவேன் என்றார் நமது மீட்பர் (மத்தேயு 16:17-19).

வேறே ஆடுகள் எனக்குண்டு, என விளம்பின நமது இரட்சகர், அவைகளை கொண்டு வர சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி கட்டளையிட்டார் (மாற்கு 16:15) அதன்படி, எருசலேம், யூதேயா சமாரியா என எங்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. யூதர்களுக்கு பரலோக ராஜ்யத்தை திறக்கும்படி தேவனால் பயன்படுத்தப்பட்ட பேதுரு யோப்பா பட்டணத்தில் இருக்கையில் தரிசனம் காண்கிறான். தேவன் சுத்தமாக்கினவைகளை தீட்டாக எண்ணாதே என அவனுக்கு அறிவிக்கப்பட்டது (அப்போஸ். 10:9).

தேவ வழிநடத்துதலினால் கொர்நேலியு வீட்டிற்கு வந்த பேதுரு அங்கே கொர்நேலியு தன் வருகைக்காக ஆயத்தமாயிருப்பதைக் கண்டான். அதுமாத்திரமல்ல. கொர்நேலியு பேதுருவினிடத்தில் கூறின வார்த்தைகளை கவனியுங்கள். "தேவனாலே உமக்குக் கட்டளையிடப்பட்ட யாவையும் கேட்கும்படிக்கு நாங்கள் எல்லாரும் இப்பொழுது இங்கே தேவ சமூகத்தில் கூடியிருக்கிறோம்" என்றான். (அப். 10:33). அதை முன்னிட்டு பேதுரு பேசத் தொடங்கி அவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவித்தான். அப்படி அவன் பேசியதைக் கேட்டவர்கள் மீது இறங்கினார்.

அப்பொழுது பேதுரு கூறும் காரியத்தை கவனியுங்கள் இதோ அவனது வார்த்தைகள் "நம்மைப் போலப் பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா என்று சொல்லி, கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கும்படி கட்டளையிட்டான்" (அப். 10:47,48). ஞானஸ்நானம் பெற்ற கொர்நேலியு கர்த்தரால் கிறிஸ்துவின் சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட முதல் புறஜாதியாய் இருக்கிறான் (அப். 11:1,18) இப்படியே கர்த்தர் தமது நியாயத்தை புறஜாதிகளுக்கு விளங்கப் பண்ணினார்.

(தொடரும்) ஜே. பிக்கின்ஸ்

## கிறிஸ்து நமக்கு எப்படியாக இருக்கிறார்?

1. கிறிஸ்து நம்முடைய ஒளியாக இருக்கிறார் (யோவான் 8:12)
2. கிறிஸ்து நம்முடைய ஜீவனாக இருக்கிறார் (யோவான் 11:25)
3. கிறிஸ்து நமக்கு வழியாக இருக்கிறார் (யோவான் 14:6)
4. கிறிஸ்து நம்முடைய இரட்சகராக இருக்கிறார் (அப். 4:12)
5. கிறிஸ்து நம்முடைய கன்மலையாக இருக்கிறார் (1கொரிந்தியர் 10:4)

# ஆராதனையில் இசைக்கருவி கூடாது என்பதற்கான 30 காரணங்கள்

தேவனுக்கான ஆராதனையில் இசைக்கருவிகளைக் கொண்டு பாடுவது, அவைகளைப் பயன்படுத்தலாமா அல்லது பயன்படுத்தக்கூடாதா என்பது சர்ச்சைக்கிடமான ஒரு கேள்வியாக இருக்கிறது. ஆனால், தேவனுடைய வார்த்தைகளின் அதிகாரத்தையும், அவைகளின் உண்மைத் தன்மையையும் ஏற்றுக் கொள்ளும் ஒருவனுக்கு அப்படிப்பட்ட சந்தேகங்கள் இருக்கத் தேவையில்லை.

இசைக்கருவிகள் கூடாது என்று சொல்லும்போது, ஏதோ மற்றவர்களிலிருந்து வேறுபட்டவர்களாக இருக்க வேண்டுமென்பதற்கோ அல்லது இசைக்கருவிகளில் எங்களுக்கு விருப்பமில்லையென்பதைக் காண்பிப்பதற்கோ அல்லது அவைகளை வாங்குவதற்கான பொருளாதார வசதி இல்லை என்பதாலோ அப்படிச் சொல்லுவதில்லை. மாறாக, பரலோகத்திலிருந்து அப்படிச் செய்வதற்கான அதிகாரமில்லை என்பதுதான் ஒரே காரணம்.

புதிய ஏற்பாட்டில், பாடும்போது எவ்வித இசை இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கும் எட்டு இடங்களிலும், இசைக் கருவிகள் பற்றி எதுவுமே சொல்லப்படவில்லையென்பதை நாம் கவனிக்கத் தவறி விடக்கூடாது. (மத். 26 : 30; அப். 16:25; ரோமர் 15:9; 1 கொரி. 14:15; எபே. 5:19; கொலோ. 3:16; எபி. 2:12; யாக். 5:13).

ஆகவே, ஆராதனையில் இசைக்கருவிகளைப் பயன்படுத்த தேவனுக்குப் பயப்படும் ஒருவன் துணியாமலிருப்பது இப்பூமிக்குண்டான பக்தி வாழ்வுக்கும், மறுமையின் பரலோக வாழ்வுக்கும் நல்லது. ஏனெனில் :


1. இயேசு இசைக்கருவிகள் பற்றி போதிக்கவில்லை (அப். 1:1)
2. கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் இது பற்றி போதிக்கவோ, கைக்கொள்ளவோ இல்லை. (மத். 28:18-20).
3. ராஜ்ஜியத்தின் திறவுகோல்களைக் கொண்டிருந்த பேதுருவும், மற்ற அப்போஸ்தலரும் இதை அங்கீகரிக்கவில்லை (மத். 16:19; 18:18).
4. பரிசுத்த ஆவியானவர் இதுபற்றி போதித்து அறிவிக்கவில்லை (யோவான் 16:13).
5. ஆராதனையில் இசைக்கருவி வேண்டும் என்று போதிக்கிறவர்கள் தேவனுடைய வார்த்தைகளின்படி போதிக்கிறவர்களல்ல (1பேதுரு. 4:11).
6. இசைக்கருவிகள் சத்தியத்தின்படியானதல்ல (யோவா 4:24; 17:17).
7. இது ஜீவனுக்கும், தேவபக்திக்கும் ஏதுவானதல்ல (II பேதுரு1:3)
8. தேவனுடைய பார்வையில் இது ஒரு நற்கிரியை அல்ல (II தீமோ. 3:16-17)

9. இதன் பயன்பாட்டைப் போதிப்பது, வேறொரு சுவிசேஷத்தைப் போதிப்பதாகும் (கலா. 1:8-9).
10. கருவி இசை பற்றிப் போதிப்பது மனிதனைப் பிரியப்படுத்தும் செயல் (கலா 1:10).
11. இது, இயேசுகிறிஸ்துவின் வெளிப்பாட்டின்படி வந்ததல்ல (கலா 1:11-12).
12. இது தேவ ஆலோசனையின் ஒரு பகுதியல்ல (அப். 20:27)
13. இது ஆரோக்கியமான வசனங்களின்படியானதல்ல (II தீமோ. 1:13).
14. விசேஷித்த உடன்படிக்கையில் இது பற்றி இல்லை. (எபி. 8:6)
15. இது விசுவாசத்தின்படியானதல்ல (ரோமர் 10:17; II கொரி 5:7)
16. இது இரத்தத்தால் முத்திரிக்கப்பட்ட ஒரு செயல்பாடு அல்ல (எபி. 10:28-29)
17. ஆராதனையில் இசைக்கருவி மனிதனுடைய கற்பனையின்படியானது (மத். 15:9).
18. தேவ வசனங்களில் ஆராதனை பற்றிச் சொல்லப்பட்டுள்ளவைகளில் கூட்டும் ஒரு செயல் (வெளி. 22:18)
19. தேவனுக்கான ஆராதனையில் அந்நிய அக்கினி செலுத்துவது போன்ற ஒன்று (லேவி. 10-1; 1தீமோ. 3:14-15).
20. இதை பயன்படுத்துவது, கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராத ஒரு செயல் (2 யோவான் 9-11).
21. இது சுய இஷ்டமான ஆராதனை (கொலொ. 2:20-23).
22. தேவனால் கொடுக்கப்பட்ட பக்தி முறைக்கு மாற்றானது (அப். 2:42).
23. கர்த்தரின் நாமத்தினாலே இதைச் செய்ய முடியாது (கொலோ. 3:16-17).
24. இதை உபயோகிப்பது பற்றிப் பேசுவது, அவருடைய வார்த்தையை உண்மையாய்ப் போதிப்பதாகாது. (2 தீமோ 4:2)
25. இதற்காக விசுவாசிகளால் தைரியமாய்ப் போராட முடியாது (யூதா 3).
26. ஒருவன் ஒளியிலே நடந்து கொண்டு, இதை உபயோகிப்பதை ஆதரிக்க முடியாது (1யோவான் 1:7).
27. இதை உபயோகிப்பது, கிறிஸ்துவுக்குள்ளான உண்மையிலிருந்து விலகும் செயல் (2 கொரி. 11:3).
28. இதை அறிமுகப்படுத்துவது பிரிவினையை உண்டாக்கும் (யோவான் 17:20-21; 1ராஜா. 18:18).
29. ஆராதனையில் இதைக் கூட்டுவது, துணிகரமான பாவமாக இருக்கும் (உபா. 18:20; சங்.19:13)
30. பாதுகாப்பானதும், சரியானதுமான ஒரு வழிமுறை யாதெனில், தேவனுக்கான ஆராதனையில் இசைக் கருவிகள் பயன்படுத்துவதை ஏற்க மறுப்பது தான். (யோவான் 12:48)

# BIBLE MEDITATION

## TV PROGRAM



**HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA**

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

Licensed to Post without pre payment No. TN/WR/ERD/03/WPP/2009-2011
Regd. News Paper RNI No. 47661/87 Postal Regn. No. Erode/26/2009-2011
Posted at Erode HPO on 20/21 of Every Month


# திருமறை ஆசான்

இதழ் ஆசிரியரின்

## திருமறை தியானம்

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் TV | திங்கள் | காலை | 7.00 | மணி |
| பொதிகை TV | செவ்வாய் | காலை | 5.30 | மணி |
| தமிழன் TV | சனி | காலை | 7.15 | மணி |

## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

**Advanced Bible Correspondence Course**

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு ரூ. 100/ மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

எங்களிடம் ஏற்கனவே அஞ்சல் வழிக்கல்வி BASIC BIBLE COURSE படித்து முடித்தவர்களும், படிப்பவர்களும் இதில் சேர்ந்து பயன்பெறலாம்.

இயக்குநர்

அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் - 638 701.
தமிழ்நாடு. இந்தியா.


Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.